Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 175 | வியாழக்கிழமை | வைகாசி 05 ஆம் நாள் 20 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## பல்கலை. நுழைவுக்கு விண்ணப்பிக்க அனுமதி

கொழும்பு, மே 20
2020/21 ஆம் கல்வி ஆண்டுக் கான பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங் கள் நாளை வெள்ளிக் கிழமை தொடக்கம் ஜூன் 15 >

# ஒற்றையாட்சிக்குள் 13 ஐ செயற்படுத்தவும்

### எதிர்க்கட்சித் தலைவர் ஆலோசனை



கொழும்பு, மே 20
**நாட்டில் நிலையானதொரு சமாதானம் ஏற்படவேண்டுமெனில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதற்காக ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.** 15 >

## 'போர்ட் சிட்டி' சட்டவரைபை அனைவரும் ஆதரியுங்கள்

### நாடாளுமன்றில் மஹிந்த மன்றாட்டம்



கொழும்பு, மே 20
"எமது நாட்டை நேசிக்கும், நாட்டின் எதிர்காலப் பயணத்தை ஆசீர்வதிக் கும் அனைத்து உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி கொழும்புத் துறை முக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரை 15 >



ஆடைத் தொழிற்சாலை கொத்தணி

## இரு வாரங்களுக்கு முடங்கின முல்லை. பொலிஸ் பிரிவுகள்

முல்லைத்தீவு, மே 20
முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாக் கொத்தணியைத் தொடர்ந்து, மாவட்டத்தின் முல்லைத்தீவு, 15 >

## தமிழ் மக்களுக்காகவே புலிகள் போராடினர் என்பது கவலையாம்

கொழும்பு, மே 20
"தமிழ் மக்களுக்காகவே புலிகள் போராடினார் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சபையில் உரையாற்றுவது கவலையளிக்கின்றது." என்று இறுதிப்போரை வழி நடத்திய இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷலும் 15 >

## நேற்று தொற்று 3600+

கொழும்பு, மே 20
இலங்கையில் முதல் முறையாக நாளொன் றில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியா னவர்களின் எண்ணிக்கை நேற்று 3 ஆயிரத்து 600ஐக் கடந்துள்ளது. 15 >

## சாவு 36

கொழும்பு, மே 20
இலங்கையில் நேற்று 36 கொரோனாச் சாவுகள் பதிவாகியுள்ளன. இதுவே இலங்கையில் நாளொன்றில் பதி 15 >

## புதுக்குடியிருப்பு கொத்தணி 422 பேர் தலைமறைவு

முல்லைத்தீவு, மே 20
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்கு டியிருப்பில் உள்ள ஆடைத் தொழிற் 13 >

நெல்லியடி கோவிலில் திருட்டு

## நகைகள், கலசம், பணத்துடன் மூவர் கைதாகி விசாரணையில்

யாழ்ப்பாணம், மே 20
நெல்லியடி நுணுவில் குளக்கட்டு விநாயகர் கோவிலில் கூரை பிரித்து உள் இறங்கி திருட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவரும், அவர்களிடம் கோவில் 13 >

கொரோனாக் கட்டுப்பாட்டுக்கு

## வடக்கு மாகாணத்தில் ஆளணிப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், மே 20
வடக்கு மாகாணத்தில் தொற்றாளர்கள் எண் ணிக்கை தொடர்ந்தும் அதிகரித் துச் செல்லும் நிலையில், அத 15 >

## தமிழரசின் உறுப்பினர்கள் உடன் பதவி விலகவும்

*வவுனியா மாவட்டக் கிளை அறிவிப்பு*

வவுனியா, மே 20
தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா நகரசபை உறுப்பினர்களை பதவி விலகுமாறு தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் குழு 13 >

சீனாவுக்கு வழங்குவதைவிட

## தமிழருக்கு வழங்கியிருந்தால் குருதி ஆறு ஓடியிருக்காது

கொழும்பு, மே 20
சீனாவுக்கு அதிகாரத்தைக் கொடுக்க நினைப்பவர்கள், தமி ழர்களுக்குக் கிடைக்க வேண் டிய அதிகாரங்களைப் பகிர்ந்த ளித்திருந்தால், இலங்கையில் குருதி ஆறு ஓடியிருப் பதை தடுத்திருக்க முடி 15 >

## கொரோனாவால் நேற்று மன்னாரிலும் ஒரு சாவு

மன்னார், மே 20
மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற் றுக்குள்ளாகியவர்களில் சிகிச்சை பயனளிக்காது நேற்றும் ஒருவர் 15 >

## நாளை தொடக்கம் பஸ் சேவை இராது

கொழும்பு, மே 20
நாடு முழுவதும் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் பொதுப்போக்குவரத்து நடவ டிக்கைகள் இடம்பெற மாட் டாது என்று போக்கு வரத்து அமைச்சு 15 >

உதயன் சஞ்சீவி

வாசகர்களே.....!



ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை இம்முறை வெள்ளிக்கிழமை வெளிவருகிறது.

32 பக்கங்கள் விலை 40/=

தற்போதைய அசாதாரண சூழ்நிலையை முன்னிட்டு எதிர்வரும் 23.05.2021 ஞாயிற்றுக்கிழமைக்குரிய சஞ்சீவி வார இதழுடன் கூடிய உதயன் நாளிதழை 21.05.2021 வெள்ளிக்கிழமையே எமது முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பயணத்தடையால் 60 பில்லியன் ரூபா இழப்பு

## இராஜாங்க அமைச்சர் தகவல்



**கொழும்பு, மே 20**

**நாடளாவிய ரீதியில் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையால், 60 பில்லியன் ரூபா பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சரான அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டில் நாளாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. பத்து நாள்களுக்கு நாடு முடக்கப்பட்டால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் இழப்பு 150 பில்லியன் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
சரியான நேரத்தில் ஆடைத் தயாரிப்புகளை வழங்க இயலாமை அண்மைய நாள்களில் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அன்றாட வாழ்வில் சம்பாதித்து வந்த ஏராளமான மக்கள் இந்தக் காலகட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்துவிட்டனர்.
எனவே எமது நாடு சிறிய பொருளாதார நாடாகவுள்ளமையால், நாட்டை முழுமையாக முடக்காமல் சிறந்த தடுப்புச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதே சரியான வழியாகும் - என்றார். (ம-4)

# பம்பலப்பிட்டியில் புதிய வைரஸ்

கொழும்பு, மே 20
இலங்கையில் தற்போது பரவும் புதிய வகையான கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பம்பலப்பிட்டியில் இனங்காணப்பட்டுள்ளனர்.
நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அங்கு 21 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். (ம-4)




# 10 நாள்களுக்கு மூடப்படுகின்றன விமான நிலையங்கள்

கொழும்பு, மே 20
நாளை வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் 31 ஆம் திகதி நள்ளிரவு வரை அனைத்து விமான சேவைகளும் இரத்து செய்யப்படவுள்ளன என சிவில் விமான சேவைகள் அதிகார சபை அறிவித்துள்ளது. கொரோனாத் தொற்றை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச குறிப்பிட்டார். (ஒ.இ)

# கர்ப்பிணிகளுக்கு சைனோஃபோர்ம்

### சுகாதார அமைச்சுக்கு பரிந்துரை



கொழும்பு, மே 20
கர்ப்பிணிகளுக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியைச் செலுத்துவது சிறந்தது என்று மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் மருத்துவர்கள் நிறுவனத்தால், சுகாதார அமைச்சுக்கு கர்ப்பிணிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
எனினும், ஏனையவர்களுக்குப் போன்று தடுப்பூசி மையங்களில் தடுப்பூசி செலுத்தக் கூடாது, இதற்காக விசேட வழிமுறை முன்மொழியப்பட்டுள்ளது என்று மகப்பேற்று பெண்நோயியல் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு நியூமோனியா நிலைக்கு தள்ளப்படுகின்ற கர்ப்பிணிகளுக்கு, சிகிச்சை அளிப்பதற்காக இலங்கையில் தனியான சிகிச்சை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-4)

# கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி இதுவரை முடிவில்லை



கொழும்பு, மே 20
கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்கு இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. எனினும் பாலூட்டும் தாய்மார்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள தகுதியுடையவர்கள் என்று தொற்று நோய்ப் பிரிவின் பிரதானி விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.
கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசியைச் செலுத்த சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. எனினும் இதுவரை முழுமையான பரிந்துரைகள் எவையும் கிடைக்கவில்லை. அவர்களுக்குத் தடுப்பூசியை செலுத்துவது தொடர்பான எவ்வித ஆய்வுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசிகளைச் செலுத்துவதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று மகப்பேற்று மருத்துவர்கள் ஆய்வகத்தின் செயலாளர் விசேட மருத்துவர் சாமிந்த மாதொட தெரிவித்திருந்தார். (ம-4)

# தடுப்பூசிகளை செலுத்தும் பணி துரிதகதியில்

கொழும்பு, மே 20
நாட்டில் 3 நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
அதற்கமைவாக சீனாவின் சைனோஃபோர்ம் தடுப்பூசி இதுவரை 4 லட்சத்து 57 ஆயிரத்து 840 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை இந்தியாவின் கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் இதுவரை 2 லட்சத்து 97 ஆயிரத்து 686 பேருக்குச் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசி இதுவரை 14 ஆயிரத்து 917 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-4)

# 5 லட்சம் தடுப்பூசிகள் சீனா நன்கொடை

கொழும்பு, மே 20
மேலும் 5 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கவுள்ளதாக சீனா உறுதியளித்துள்ளது. இந்த மாத இறுதிக்குள் அவை இலங்கைக்கு விநியோகிக்கப்படும் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் உறுதியளித்துள்ளது. (ஒ.இ)

# பரிசோதகர் என்று கூறி மாங்குளத்தில் கொள்ளை

முல்லைத்தீவு, மே 20
மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதிய கொலனி பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என்று அடையாளப்படுத்தி நேற்று வீட்டுக்குள் நுளைந்த நபர், வயோதிபப் பெண் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்து சென்றுள்ளார்.
பெண் அவலக் குரல் எழுப்பியபோது அயலவர்கள் வந்தமையால், கொள்ளையன் தப்பிச்சென்றுள்ளான் என்று முறையிடப்பட்டுள்ளது. (த-19)

# காங்கிரஸ் எம்.பி.க்கு கொரோனாத் தொற்று



கொழும்பு, மே 20
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக் காக அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ஒ.இ)

# கொரோனாத் தடுப்பூசி பதிவு: இணையத்தளம் விரைவில் ஆரம்பம்




கொழும்பு, மே 20
கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் மக்களின் வசதிக்காக இணையத் தளத்தை வடிவமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மக்கள் பதிவுசெய்து கொவிட் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கான இந்த இணையத்தளம் எதிர்வரும் இரண்டு நாள்களில் இயங்க ஆரம்பிக்கும்.
இணையத்தளம் ஊடாக பொது மக்கள் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கான திகதி, நேரம் மற்றும் மத்திய நிலையம் ஒன்றை ஒதுக்கிக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
இதனூடாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட 'தடுப்பூசி சான்றிதழை' பெறுவதற்கான வாய்ப்பும் மக்களுக்கு கிடைக்பெறவுள்ளது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சலுக்கு மருத்துவமனைக்கு செல்லவும் அனுமதிக்காத படையினர்

## முல்லைத்தீவில் பெரும் அவலம்

**முல்லைத்தீவு, மே 20**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று பொலிஸ் பிரிவுகள் முடக்கப்பட்டுள் ளமையால் அந் தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் காய்ச்சல் உள்ளிட்ட கொரோனா அறிகுறிகளுக்குகூட மருத்துவமனைக்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.**

மருத்துவமனைக்குச் செல்வதற்காக வீதிக்கு வரும் பொதுமக்களை படையினர் திருப்பி அனுப்புகின்றனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாபெரும் கொத்தணி உருவாகியுள்ளது. இதனையடுத்து புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, முல்லைத்தீவு ஆகிய மூன்று பொலிஸ் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஆடைத்தொழிற்சாலையால் பலருக்கு தொற்றுப் பரவியிருக்கலாம் என்ற அச்சம் சுகாதாரத் துறையினர் மத்தியில் எழுந்துள்ளது. ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களின் குடும்பத்தவர்கள் பலர் தொற்றுக்கு உள்ளாகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்று கூறப்படுகின்றது.

அவ்வாறான குடும்ப உறுப்பினர்களும் இந்த முடக்கப்பட்ட பகுதிகளுக்குள் இருப்பதால், தொற்று அறிகுறி தென்பட்டாலும் மருத்துவமனைக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. மருத்துவமனைக்குச் செல்வதற்கு வீதிகளுக்கு வந்தால் கடமையிலுள்ள இராணுவத்தினர் அவர்களைத் திருப்பி அனுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

# கொத்தணியால் முடங்கியது கரைச்சி பிரதேச சபை

## மாவட்டச் செயலர் அறிவிப்பு

கிளிநொச்சி, மே 20

கொரோனாத் தொற்றால் கரைச்சி பிரதேச சபை முற்றாகவும் பொதுச் சந்தையின் ஒரு பகுதியும் முடக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மாவட்;டத்தில் 389பேர் தொற்றுடன் கண்டறியப்பட்டுள்ளனர். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 34பேரும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 40 பேரும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 84பேரும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 231பேரும் கண்டறியப்பட்டுள்ளனர். இதேவேளை, மாவட்டத்தில் ஆயிரத்து 180பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபை கொரோனாக் கொத்தணி காரணமாக முடக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தை சுத்திகரிப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பொதுச் சந்தையின் ஒரு பகுதியும் முடக்கப்பட்டுள்ளது- என்றார். (ஒ.ய,113)

# யாழ்ப்பாணத்தில் சடுதியாக தொற்றாளர்கள் அதிகரிப்பு

## மக்களின் ஒத்துழைப்பை கோருகின்றார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,மே 20

வடக்கில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.


யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் அதிகரித்துள்ள கொரோனாத் தொற்று நிலை காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் ஆகியோருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒரு நாளில் ஒரு தடவை மேற்கொண்ட பரிசோதனையை இரவு நேரத்திலும் மேற்கொண்டு வருகின்றோம்.. இதன் மூலம் நாளாந்தம் 800க்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள முடிகின்றது..

சுகாதார நடைமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்களை கையாண்டு இந்த தொற்றிலிருந்து விடுபட வேண்டும் என்பதையும் நாங்கள் முக்கியமாக கேட்டுக்கொள்கின்றோம். தற்பொழுது யாழ் குடாநாட்டில் தொற்று அதிகரித்து செல்லும் நிலை காணப்படுகின்றது. வெளி நோயாளர் பிரிவுக்கு வருபவர்களுக்கு ஏதாவது நோய் அறிகுறிகள் சந்தேகத்துக்கிடமான முறையில் இருந்தால் அவர்கள் உடனடியாக அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதனைத் தொடர்ந்து பி.சிஆர் பரிசோதனையும் அவர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. அப்படி செய்யும் பொழுதும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் கீழ் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி தனிமைப்படுத்தல் மையம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அங்கு போதுமான ஒட்சிசன் சிலிண்டர்கள் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (ஜ-20)



# கர்ப்பிணிகளை வேலைக்கு அழைக்காதே; தாயையும் சிசுவையும் கொல்லாதே!!!

## மன்னாரில் தாதியர்கள் போராட்டம்

மன்னார், மே 20

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவமனை வளாகத்தில் அடையாள கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் பங்கேற்ற தாதியர்கள் தெரிவிக்கையில்,

கொரோனாக் காலத்தில் தாதியர்களுக்கு விசேட விடுமுறை அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று கர்ப்பிணிகளை வேலைக்கு அழைக்கவேண்டாம் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. தாதியர்களுக்குரிய விசேட விடுமுறையும் வழங்கப்படவில்லை. கர்ப்பிணிகள் வேலைக்கு அழைக்கப்படுகின்றனர். அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளும் தாதியர்கள் ஒழுங்கான முறையில் கிருமித் தொற்று நீக்கவோ ஓய்வு எடுக்கவோ வசதிகள் இல்லை. வேறு மாவட்டங்களுக்கு பணியின் நிமித்தம் செல்லும் அம்புலன்ஸ் சாரதிகளோ மேலதிக கடமை மேற்கொள்ளும் தாதியர்களோ தங்குவதற்கு ஒழுங்கான ஓய்வு விடுதியோ அல்லது சாதாரண அறையோ இல்லை. இவை தொடர்பில் மன்னார் பொது மருத்துவமனைப் பணிப்பாளரிடம் பல்வேறு முறை சுட்டிக்காட்டியும் இது வரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இந்த வாரத்துக்குள் எமது பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தரப்படாவிட்டால் இலங்கை முழுவதும் உள்ள தாதியர்களோடு இணைந்து தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்போம் என்றனர். (ஒ.ஜ.213)

# தனிமைப்படுத்தல் மையம் மன்னாரிலும் ஆரம்பம்

மன்னார்,மே 20

கொரோனாத் தொற்றாளர்களை கவனிப்பதற்கு மன்னார் மாவட்டத்தில் இடைத்தங்கல் சிகிச்சை நிலையம் ஒன்று நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மன்னார் மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டால் இவர்கள் வெளி மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த இடைத்தங்கள் முகாமுக்கே அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்பொழுது மன்னாரில் கொவிட் தொற்றாளர்களுக்கான இடைத்தங்கல் முகாம் திறந்து வைக்கப்பட்டு நோயாளர்களை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ் இடைத்தங்கல் பராமரிக்கும் நிலையம் தொடர்பாக மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவுக்கான மருத்துவ அதிகாரி கதிர்காமநாதன் சுதாகர் கருத்து தெரிவிக்கையில்

"மன்னார் மாவட்டத்தில் மாவட்டச் செயலரால் பொறுப்பேற்கப்பட்டு இராணுவத்தின் 54 ஆவது படையணியால் மறுசீரமைக்கப்பட்ட கொவிட் தொற்றாளர்களுக்கான இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் தாராபுரம் துருக்கி சிட்டியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிலையம் பெண்களுக்கான பராமரிப்பு நிலையமாக இன்று(நேற்று) தொடக்கம் செயல்பட ஆரம்பித்துள்ளது. இவ் நிலையத்தில் தற்போது நூறு படுக்கைகள் மட்டுமே காணப்படுகின்றன. இதனால் 100 நோயாளிகளை மட்டுமே சகல வசதிகளுடன் பராமரிக்கக்கூடியதாக இருக்கும்" என்றார். (ஜ-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொலிஸாரின் பாதுகாப்பிலிருந்த

# பாதாளக் குழுவினர் கொல்லப்பட்டமைக்கு அறிக்கை கோருகிறது ம. உ. ஆணைக்குழு

**கொழும்பு,மே 20**

**பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த பாதாளக் குழு உறுப்பினர்களான 'கொஸ்கொட தாரகா' மற்றும் 'ஊரு ஜுவா' ஆகியோரின் உயிரிழப்புத் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் முழுமையான அறிக்கையை வழங்குமாறு பொலிஸ் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொலிஸாரின் பொறுப்பின் கீழுள்ள சந்தேகநபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பு. இது பொலிஸ் திணைக்களத்தின் கட்டளைகள் மற்றும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் ஊடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அண்மையில் இரண்டு சந்தேகநபர்களின் உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளமை நாட்டின் சட்டத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காகவே, விசாரணைகளின் முழுமையான அறிக்கையை கோரியுள்ளோம் - என்றுள்ளது. (ம-4)

## பவித்ரா – சஜித் கடும் விவாதம்

கொழும்பு, மே 20

நாட்டின் கொரோனாத் தொற்று நிலைமை தொடர்பில், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் நாடாளுமன்றில் கடும் விவாதத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மீதான கட்டுப்பாட்டை அரசு இழந்துவிட்டது. சுற்றுலாப் பயணிகளைச் சுதந்திரமாக நடமாட அனுமதித்துள்ளது.

போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக வைரஸ் பரவுகின்றது. தனிமைப்படுத்தல் உத்தரவுகளை நீக்கியமையும் இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் அரசின் நடவடிக்கைகளை எதிர்க்கட்சித் தலைவர் குழப்ப முயல்கின்றார் என்றார். இதனால் இருவரும் மாறி மாறி சிறிது நேரம் விவாதத்தில் ஈடுபட்டனர். (ம-4)

## 3 மாதங்களுக்கு சம்பந்தனுக்கு விடுமுறை

கொழும்பு, மே 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனுக்கு மூன்று மாதகால விடுமுறை வழங்குவதற்கு நாடாளுமன்றம் அனுமதியளித்துள்ளது.

எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்லவால் முன்வைக்கப்பட்ட விடுமுறை கோரிக்கைக்கே சபை இவ்வாறு அனுமதியளித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன் அனுமதி எதுவுமின்றி மூன்று மாதங்கள் சபை அமர்வில் தொடர்ச்சியாக கலந்துகொள்ளாவிடின் அவரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோய்விடும். எனவேதான் இவ்வாறு விடுமுறை கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ஒ.44)

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

## அரச தரப்பு நிரபராதியென்றால் சர்வதேச விசாரணை நடத்துக

### எதிர்க்கட்சி வலியுறுத்து



கொழும்பு, மே 20

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உண்மைகளை அறிய, சர்வதேச விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. அரசு நிரபராதியென்றால், சர்வதேச புலனாய்வாளர்களை நாட்டுக்கு அழைத்து, விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சி வலியுறுத்தியது.

இது தொடர்பில் கட்சியின் பிரதம கொறடாவும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல, நிதிச்சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மீதான நாடாளுமன்ற விவாதத்தில் தெரிவிக்கையில்;

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மாகந்துர மதுஷ் உள்ளிட்ட 7 பேர் இதுவரையில் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இது இலங்கைக்கு வெட்கக்கேடான ஒன்று. நல்லாட்சி அரசின் காலத்தில், கைதுசெய்யப்பட்ட எவரும் கொலை செய்யப்படவில்லை.

அதேவேளை உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில், போதுமான சாட்சியங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் அறிவித்துள்ளார். சாட்சியங்கள் இல்லாது எவருக்கு எதிராகவும் வழக்குத் தொடரமுடியாது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு, சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கியது யாரென விசாரிக்கவில்லை.

அதேபோன்று பயங்கரவாதிகள் புலனாய்வுத் துறையினருடன் தொடர்பில் இருந்திருக்கின்றனர். இதுபோன்ற புலனாய்வுத் துறையை வைத்துக்கொண்டு விசாரணைகளை நிறைவுசெய்ய முடியாது. எனவே அரசு நிரபராதியென்றால், சர்வதேச புலனாய்வாளர்களை நாட்டுக்கு அழைத்து, விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம-4)

## முகக்கவசத்தால் சபையில் சர்ச்சை



கொழும்பு,மே 20

நாடாளுமன்ற அமர்வில் அமைச்சர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள் முகக்கவசம் அணியாதிருந்தமையால் சபையில் சிறிது நேரம் சர்ச்சை ஏற்பட்டது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவுக்கான சந்தர்ப்பத்தில், சுகாதார அமைச்சரிடம் மேலதிக கேள்விகளை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முகக்கவசம் அணிந்திருக்கவில்லை. முதலில் முகக்கவசத்தை அணிந்து உரையாற்றுங்கள் என்று பவித்ரா கடுந்தொனியில் கூறினார்.

இதற்குப் பதிலடி வழங்கிய சாணக்கியன, முகக்கவசம் அணிவது அனைவரதும் பொறுப்பு. 'உங்களுக்கு மேலுள்ள ஆசனத்தில் அமர்ந்திருக்கும் சரத் வீரசேகவும் முகக்கவசம் அணியவில்லை. எனக்கு மாத்திரம் கூறாது, சரத் வீரசேகரவுக்கும் கூறுங்கள்' என்றார். அசோக்க அபேசிங்க உள்ளிட்ட சிலரும் முகக்கசம் அணிந்திருக்கவில்லை என்பதை சபாநாயகர் சபையில் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து சரத் வீரசேகர அவசர அவசரமாக முகக்கவசத்தை அணிந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

## துறைமுகநகர் சட்டவரைவுக்கு எதிராக ஜே.வி.பி. போராட்டம்

நாட்டைப் பலிகொடுக்கின்ற, தன்னாதிக்கத்தைக் காட்டிக்கொடுக்கின்ற கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவை நிறைவேற்ற வேண்டாம் என்று வலியுறுத்தி ஜே.வி.பி.யினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு, பத்தரமுல்லையிலுள்ள நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட இப் போராட்டத்தில் ஜே.வி.பி.யின் இந்நாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், 'அரசமைப்புக்கு முரணாக சட்ட வரைவை அரசு முன்வைத்துள்ளது. அதன் 25 சரத்துக்கள் அரசமைப்புக்கு எதிரானவை என்று உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியதுடன், சர்வஜன வாக்கெடுப்பு குறித்தும் பரிந்துரை முன்வைத்தது. சட்டவிரோதமாக அரசு செய்ய முற்பட்டதை நீதிமன்ற நடவடிக்கை ஊடாக நாம் நிறுத்தியுள்ளோம். இந்தச் சட்டம் ஊடாக என்ன நடக்கப்போகின்றது என்பதை அறியும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது. அது தொடர்பில் சமூகத்தில் கருத்தாடல் இடம்பெறவேண்டும். அதற்கான வாய்ப்பை அரசு வழங்கவில்லை. இதனை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டாம் என்று சகல நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ஒ.44)

## சிறைச்சாலைகளில் சுகாதாரம் இல்லை

### அனுபவத்தைப் பகிர்ந்தார் பிரேமலால்

கொழும்பு, மே 20

சிறைச்சாலைகளில் சமூக இடைவெளி, சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்தல் மற்றும் முகக்கவசத்தை அணிதல் அல்லது கொரோனாத் தொற்றை தவிர்த்தல் ஆகியவற்றில் நடைமுறைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படுவதில்லை இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர நேற்று நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்றார். இதன்போது சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் சுகாதார அமைச்சருக்கு விளக்கமளித்தார். சிறைக் கைதிகளுக்கு மிக விரைவில் கொரோனாத் தடுப்பூசி வழங்க வேண்டும். கைதிகளுக்கிடையிலான இடைவெளியைப் பேண சரியான முறையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக சிறைக்கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொறுப்புணர்ந்து செயற்படுங்கள்

இலங்கையில் ஏற்கனவே பூதாகரமாகியிருந்த கொரோனாப் பெருந்தொற்று, மேலும் விஸ்வரூபம் எடுத்துள்ளது என்பதற்குரிய இமாலய அறிகுறி நேற்றுத் தென்பட்டுள்ளது. இலங்கையில் முதல் தடவையாக கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகள் இலங்கையில், துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றன என்று அரசும் சரி, கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியும் சரி அறிவித்துள்ள போதிலும், அந்த அறிவிப்புக்கள் வெறும் சப்பைக் கட்டுக்கள்தானோ என்ற எண்ண வோட்டம் தற்போது மனதில் வலுவாக வியாபிக்கவே செய்கின்றது.

பி.சி.ஆர். சோதனைகள் செய்யப்பட்ட பின்னர், அவற்றின் முடிவுகளை வெளியிடுவதில் நீண்ட தாமதம் ஏற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு அண்மைக்காலமாக உள்ள ஒன்றுதான். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் இத்தகைய பின்னடைவுகள் அதிகமளவில் இடம்பெற்றிருக்கின்றன. கிளிநொச்சி - கரைச்சி பகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் சிலரிடம் இருந்து பி.சி.ஆர். சோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டதில் அவர்களில் இருவருக்குத் தொற்று என்று நேற்றுமுன்தினம் இரவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனின், இந்தப் பெருந்தொற்று மென்மேலும் வியாபிக்க அரசே உடந்தையாக இருக்கின்றதல்லவா?.

மேற்படி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் கடந்த ஒரு வாரத்தில் எங்கெல்லாம் சென்று வந்திருப்பார்கள்?. அவர்களின் பயணத்தடங்கள் சில வேளைகளில் கொரோனாக் கொத்தணிகளைக்கூட ஏற்படுத்த வல்லவையாக இருக்கக்கூடியவை. எனவே இந்தத் தாமதத்துக்கு யார் காரணம்?. கடந்த ஒரு வாரத்தில் அவர்கள் நிச்சயம் நோய்க்காவிகளாக இருந்திருப்பார்கள். இது வெறும் ஒரு உதாரணம்தான். இது போன்று எண்ணற்ற சம்பவங்களை இந்தப் பேரிடருக்கு எதிரான அசமந்த நடவடிக்கைகளுக்குச் சான்றுகளாக எடுத்து முன்வைக்கலாம்.

நேற்று சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இவை எப்போது செய்யப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளின் முடிவுகள், இவர்களில் எத்தனைபேர் சமூகக் காவிகளாக இருந்துள்ளனர் என்று சிந்திக்கும் பட்சத்தில் அனுதாபமும் கவலையும்தான் இலங்கைத் தீவை நோக்கி எஞ்சியவையாக இருக்கின்றன.

தமிழர் தரப்பால் மேற்கொள்ளப்படும் இனம் சார் நடவடிக்கைகளையும், அஞ்சலிப்புக்களையும், நினைவேந்தல்களையும் தடுத்து நிறுத்துவதற்குக் கொரோனாவை முதன்மைக் காரணியாகக் கொண்டு நீதிமன்றங்களை நோக்கி ஓடும் பொலிஸாரும், இன்னும் பல அரச தரப்பினரும் உண்மையிலேயே கொரோனாப் பரம்பலின் மூலகாரணமாக இருக்கின்றவற்றை இனங்கண்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டும். சிறுபான்மை மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதில் காட்டும் வேகத்தில் பாதியையேனும் பி.சி.ஆர். சோதனைகளை விரைந்து நடத்துவதிலும், அவற்றின் முடிவுகளைத் துரிதமாகப் பெற்று தொற்றாளர்களைத் தனிமைப்படுத்துவதிலும் காட்டட்டும்.

இலங்கை அவ்வளவு பெரிய பொருளாதார அடித்தளத்தைக் கொண்டுள்ள நாடல்ல. இந்த நாட்டைப் போலவே நாட்டு மக்களின் பொருளாதாரப் பின்புலமும் சிறியது. 'இதுவரை ஏற்படுத்தப்பட்ட பயணத் தடைகள் சுமார் 50 பில்லியனுக்கும் அதிகமான பொருளாதாரப் பின்னடைவை நாட்டுக்கு ஏற்படுத்தியுள்ளன' என்று இராஜாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். இவ்வாறிருக்கையில், இந்தப் பெருந்தொற்று இமாலயமானால் எதிர்காலமென்ற ஒன்று இல்லை என்ற வரலாற்றுச் சரிவுக்குள் இலங்கை தள்ளப்படும். அனைவருக்கும் இந்தப் போரில் பொறுப்புண்டு. அதையுணர்ந்து செயற்படுவோம்.



# கொத்தணிகளை உருவாக்கும் தொழிற்சாலைகளை மூடுங்கள்

## வவுனியா பொது அமைப்புக்கள் கோரிக்கை

**வவுனியா, மே 20**

**ஆடைத் தொழிற்சாலைகளால் பெரும் கொத்தணிகள் உருவாகிவரும் நிலையில், வவுனியாவிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளின் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் மூவர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பங்கள் உட்பட பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இது பரவலடையும் வாய்ப்பு உள்ளதால் அதிகமானோர் தொற்றாளர்களாக இனம் காணப்படவும், தனிமைப்படுத்தப்படவும் வாய்ப்புகள் உள்ளன.

இதேவேளை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் இளையோர் ஆடைத் தொழிற்சாலைகளில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே இந்தத் தொற்று விரிவடையும்போது மாவட்டம் முழுவதிலும் பெரும் பாதிப்பு ஏற்படும்.

எனவே தற்காலிகமாக ஆடைத் தொழிற்சாலைகளை மூட நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புக்கள் கோரியுள்ளன. (ஒ.110)

# பொருள்கள் விநியோகத்தில் எந்தத் தடையும் வேண்டாம்

## ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, மே 20

நாட்டில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில், அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கு, எந்தத் தடைகளையும் ஏற்படுத்த வேண்டாம். அதற்கான வேலைத்திட்டத்தைத் தயார்ப் படுத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பயணத்தடைக் காலத்தில் மக்கள் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும். எந்தவித தடைகளையும் ஏற்படுத்தாது, மக்களுக்கு பொருள்கள் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (ம-4)

# 4 அரச இணையத்தளங்கள்மீது சைபர் தாக்குதல்: தரவுகள் திரிபு


கொழும்பு, மே 20

அரசின் 4 இணையத்தளங்கள்மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவற்றின் தரவுகள் திருடப்படாவிட்டாலும், தரவுகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சு, மின்சார சபை, இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழகம் ஆகியவற்றின் இணையத்தளங்கள்மீதே சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் தாக்குதலுக்கு இலக்கான சுகாதார அமைச்சு மற்றும் மின்சார சபையின் இணையத்தளங்களின் செயற்பாடுகள் வழமைக்குத்திரும்பியுள்ளன என்று கணினி அவசர நடவடிக்கைப் பிரிவின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரவிந்து மீகஸ்முல்ல தெரிவித்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுடலையைத் தோண்டி அகழப்பட்ட மண் கண்டாவளை மணல் என்று விற்பனை

*மக்கள் கடும் விசனம்*

**கிளிநொச்சி, மே 20**

**கிளிநொச்சியில் மணல் அகழ்வு கட்டுப்படுத்தப்பட்டபோதும், சட்ட விரோதமாக, சுடலையைத் தோண்டி மணல் அகழ்ந்து விற்பனை செய்யப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல பகுதிகளில் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டு முற்றாக சட்டவிரோத மணல் அகழ்வு முடக்கப்பட்டுள்ளது. எனினும் சில பகுதிகளில் தற்போது மணல் அகழ்வு சட்டவிரோதமான முறையில் நடைபெற்று வருகிறது. கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் உள்ள சுடலையின் பின்புறத்தில் பல அடி ஆழத்தில் மண் அகழப்பட்டுள்ளது.

இதனால் அந்த இடம் சுரங்கப் பாதைகள் போல் காட்சி தருகின்றது. அத்தோடு இங்கு இயற்கையும் பேரழிவுக்கு உட்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பில் கனிய வளப் பிரிவினர் கவனம் செலுத்தவோ, நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ இல்லை. எனினும் சம்பவம் தொடர்பில் அறிந்த கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன், சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மக்களுக்கு உறுதியளித்தார். (ப)



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

கிளிநொச்சி,மே 20

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் 12 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி சமத்துவக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்சியின் உறுப்பினரும் முன்னாள் போராளியுமான ந.தமிழரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை கட்சியின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் லோரன்ஸ் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஏனைய சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டதுடன், அகவணக்கம் செலுத்தி மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-214)

## குடிதண்ணீர் வழங்க வாகன வசதியில்லை

*துணுக்காய் பிரதேச தவிசாளர் சுட்டிக்காட்டு*

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்கு குடிதண்ணீர் வழங்கலுக்கான வாகன வசதிகள் இதுவரை கிடைக்கவில்லை என துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது இருக்கின்ற ஒரேயொரு வாகனத்தை வைத்து துணுக்காய், மல்லாவி மற்றும் தேராங்கண்டல் போன்ற பகுதிகளுக்கான குடிதண்ணீர் வழங்கலை மேற்கொண்டு வருகின்றோம். வழமையாக மாவட்டச் செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவினரால் கடும் வறட்சியான காலத்தில் குடிதண்ணீர் வழங்கலுக்காக வழங்கப்பட்ட வாகன வசதிகள் ஏனைய பிரதேச சபைகளில் காணப்படுகின்றன. ஆனால் எமது பிரதேச சபையில் குறித்த வாகனங்கள் மீளப் பெறப்பட்டுள்ளன.

எமது பிரதேச சபை எல்லைப் பரப்புக்குள் தற்போது எட்டுக்கு மேற்பட்ட கிராமங்களில் குடிதண்ணீர் நெருக்கடி உள்ள போதிலும் குடிதண்ணீரை வழங்குவதற்கு வாகன வசதிகள் இல்லை என்ற தகவலை மாவட்டச் செயலகத்துக்கும், பிரதேச செயலகத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். வாகன வசதிகள் கிடைத்தால் உடனடியாக குடிதண்ணீர் வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்வோம் - என்றார். (ப-13)

# புத்துவெட்டுவானில் கசிப்பு விற்பனை: கட்டுப்படுத்தாது பொலிஸார் அசமந்தம்

*மக்கள் குற்றச்சாட்டு*

முல்லைத்தீவு, மே 20

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் கிராமத்தில், கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு ஐயன்கன்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என புத்துவெட்டுவான் கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஐயன்கன்குளம் வலதுகரையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடும் நபரொருவர்அதை புத்துவெட்டுவான் கிராமத்துக்கு கொண்டுவந்து விற்பனை செய்வது தொடர்பாக ஐயன்கன்குளம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக புத்து வெட்டுவான் கிராமத்தில் கசிப்பின் பாவனை அதிகரித்துள்ளது. எண்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற புத்துவெட்டுவான் கிராமத்தில் குடும்ப வன்முறைகள், சமூக வன்முறைகளின் பின்னணியில் கசிப்புப் பாவனையே காணப்படுகின்றது. இது தொடர்பாக ஐயன்கன்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டாலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. இதனால் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் புத்துவெட்டுவான் கிராமத்தில் கசிப்பால் பாதிப்புகள் ஏற்படாத வகையில் ஐயன்கன்குளம் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)

## கரைதுறைப்பற்று சபையால் சுத்தமாக்கல் வேலைத்திட்டம்



முல்லைத்தீவு, மே 20

"எங்கள் ஊர் சுத்தமானது"என்ற தொனிப்பொருளில் கரைதுறைப்பற்று பிரதேச சபையால் சுத்தமாக்கல் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று கரைதுறைபற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மக்கள் நடமாடும், மக்கள் வாழும் பகுதியில் பற்றைக் காடுகள்ாக்க் கானப்படுகின்ற பொது, தனியார் காணிகளைத் துப்புரவு செய்தல். எம்மைச் சுற்றியுள்ள குப்பைகளை அகற்றுதல் போன்றன "எங்கள் ஊர் சுத்தமானது" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்று வருகின்றன. இதற்கான பொது அறிவித்தல் உப பிரதேச சபை அலுவலங்களால் விடுக்கப்பட்டு அதற்கான செயல்வடிவமும் பல இடங்களில் துரிதமாக இடம்பெற்று வருகின்றது. இந்த வேலைத்திட்டத்துக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்கி சுத்தம், சுகாதாரம் ஆகியவற்றை பேணுவதுடன் விச ஜந்துக்கள் மற்றும் ஏனைய விடயங்களிலிருந்தும் எம்மை நாமே பாதுகாக்க ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இந்த சுத்தமாக்கல் நடவடிக்கையால், ஜீவனோபாய வாழ்வாதாரம் மற்றும் சிறு பயிர்ச்செய்கை என்பவை வளர்ச்சியடையும் வாய்ப்பும் உள்ளது - என்றார். (ப-13)

## கொடுத்த வாக்கை நிறைவேற்றாத மன்னார் நானாட்டான் பிரதேச சபை

*பிரதேச மக்கள் குற்றச்சாட்டு*



மன்னார்,மே 20

கொடுத்த வாக்கை மூன்று வருடங்களாகியும் நிறைவேற்றத் தவறியது நானாட்டான் பிரதேச சபை என்று பிரதேச மக்கள் குற்றச்சாட்டியுள்ளனர். கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற நானாட்டான் பிரதேச சபைத் தேர்தலின்போது பரப்புரை நாள்களிலும் வெற்றிபெற்று பதவி ஏற்ற பின்பும், நானாட்டான் சுற்று வட்டத்தை மணிக்கூட்டு கோபுரம் அமைத்து அழகுபடுத்தி தருவோம் என்பது அவர்களுடைய முதன்மை வாக்குறுதியாக இருந்தது.

ஆனால் மூன்று வருடங்கள் கடந்து பிரதேச சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில் குறித்த வாக்குறுதிகளை பிரதேச சபையினர் நிறைவேற்றவில்லை என்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

இயற்கையாக மிகவும் அழகாக உள்ள இந்த நானாட்டான் சுற்றுவட்டமானது தற்போது மாலை நேரங்களில் மாடுகளின் உறைவிடமாக காணப்படுகின்றது.

16 உறுப்பினர்களைக் கொண்ட நானாட்டான் பிரதேச சபையில் குறித்த சுற்று வட்டத்தை அண்மித்து 4 உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்கள் கூட நானாட்டான் சுற்றுவட்டத்தை அழகுபடுத்தும் முயற்சியை இதுவரை எடுக்கவில்லை - என்றனர். (ஜ - 213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊழியர்களுக்குத் தொற்று;

# ஆடைத் தொழிற்சாலையே இழப்பீட்டு வழங்கவேண்டும்


## கிளி. பொது அமைப்புக்கள் வலியுறுத்து

**கிளிநொச்சி, மே 20**

**புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு ஏற்பட்ட தொற்றுக்கு பெருந்தொகை இழப்பீட்டை அந்த தொழிற்சாலை வழங்க வேண்டும் எனவும், இவ்வாறான பாதிப்பால் ஏற்படும் இழப்புக்களுக்கு மாவட்டச் செயலரும், சுகாதாரத் துறையினருமே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.**

கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள் சார்பில் ஊடக சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சி ஊடக மையத்தில் இடம்பெற்றது. இதன்போது பொது அமைப்புக்கள் சார்பில் கருத்து தெரிவித்த கரைச்சி மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர் கருப்பையா ஜெயக்குமார் மேலும் தெரிவிக்கையில்;

புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையில் 310 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவ்வாறு குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும்வரை அந்த நிர்வாகம் சரியாக சுகாதார நடைமுறைகளை கையாளவில்லை. அவர்களுக்கு பி.சி.ஆர் உள்ளிட்ட விடயங்களை சரியான முறையில் கையாண்டிருந்தால் இவ்வளவு பெருந்தொகையான தொற்றாளர் அடையாளம் காணப்பட்டிருக்க மாட்டார்கள். பெருமளவானோருக்கு தொற்று ஏற்படுவதற்கு காரணம் அந்த நிர்வாகமேயாகும். பாதிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு குறித்த ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் பெருந்தொகையான இழப்பீட்டை வழங்க வேண்டும். கம்பஹாவில் தொற்று ஏற்படும்போது கண்டு கொள்ளவில்லை. புதுக்குடியிருப்பில் தொற்று அதிகரித்துள்ள போதிலும் ஏனைய நிறுவனங்கள் கண்டு கொள்ளவில்லை. இந்த நிலைமை மோசமாகி உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படுமாக இருந்தால் மாவட்டத்தில் ஏற்படும் இழப்புக்கான பொறுப்பை மாவட்டச் செயலரும், சுகாதாரத் தரப்பினரும் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் பாதுகாப்பான முறையில் நடந்துகொண்டு இருக்கின்ற போதும், வடமாகாணத்தில் இதற்கு மாறான சில நிகழ்வுகள் இடம் பெறுகின்றன - என்றார். (ப-6)





## சீதுவை கொவிட் சிகிச்சை மத்திய நிலையத்துக்கு ஜனாதிபதி விஜயம்

கொழும்பு, மே 20

சீதுவையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொவிட் இடைத் தங்கல் சிகிச்சை மத்திய நிலையத்தை ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் பார்வையிட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன், பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன, சுகாதார அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, பாதுகாப்பு பணிக்குழாம் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டோரும் கலந்துகொண்டுள்ளனர்.

பிரன்டிக்ஸ் நிறுவனம் வழங்கிய கட்டடம் ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த சிகிச்சை மத்திய நிலையம் 3 விடுதித் தொகுதிகளைக் கொண்டுள்ளது. இங்கு ஒரே நேரத்தில் ஆயிரத்து 200 நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க முடியும். நவீன தொழில்நுட்பக் கருவிகள் உட்பட தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் உளநலத்தை பாதுகாக்கும் பல வசதிகளையும் இந்த நிலையம் கொண்டுள்ளது. இராணுவத்தினரும் இராணுவத்தின் சேவா வனிதா பிரிவும் இணைந்து 10 நாள்களில் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்து இருப்பது குறிப்பிடத்தக்கது. ரணவிரு எபரல் தொழிற்சாலையின் அங்கவீன முற்ற படையினர் 24 மணி நேரத்தில் இதற்கு தேவையான 2 ஆயிரம் கட்டில் விரிப்புகளைத் தைத்துள்ளனர். நடைமுறையில் வீடுகளில் சிகிச்சையளிக்க முடியாத எனினும் மிகப் பெரும் நோய் அறிகுறிகள் இல்லாத கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு இங்கு சிகிச்சையளிக்கப்படவுள்ளது. இதன் மூலம் மருத்துவமனைகளில் உருவாக்கக்கூடிய இடநெருக்கடியை தவிர்ப்பதற்கும் மருத்துவ பணிக்குழாமினருக்கு நோய்த் தொற்றுடையவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதற்கும் சந்தர்ப்பமளிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

## 211 சிறைக்கைதிகளில் 104 பேருக்குத் தொற்று

கண்டி, மே 20

கண்டி போகம்பர சிறைச்சாலையில் 211 கைதிகளுக்கு, மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 104 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு தடுப்பிலுள்ள 536 கைதிகளுக்கான பி.சி.ஆர். பரிசோதனை விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## எட்டு மாவட்டங்கள் பெரும் அபாயத்தில்

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, மே 20

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக, நாட்டின் எட்டு மாவட்டங்கள் பெரும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் செனால் பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், காலி, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் நாள்தோறும் அதிகபட்சம் 80 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இரத்தினபுரி மாவட்டமும் இந்த அபாய நிலைமையில் உள்ளது.

நாட்டில் தற்போது தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளதால், எதிர்வரும் வாரங்களில், தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இருப்பினும், தொற்றுப் பரவலைத் தடுக்கும் நடவடிக்கைகளில், சுகாதாரத் துறையினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி, இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது- என்றார். (ம-4)


## 35 பேருடன் வந்திறங்கியது இந்திய விமானம்

கொழும்பு, மே 20

இலங்கை வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடன், இந்திய விமானம் ஒன்று நேற்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.


எயா இந்தியா விமான சேவைக்குச் சொந்தமான இந்த விமானத்தில் 19 இலங்கையர்களும், இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் 16 உத்தியோகத்தர்களும் உட்பட 35 பேர் வருகை தந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதை அடுத்து விமான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இந்தியர்கள் இலங்கைக்கு வருவதற்கும் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)



கொரோனா நோயாளிகளுக்கான அத்தியாவசிய பொருள்கள் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தால் மாவட்டச் செயலரிடம் நேற்று கையளிக்கப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலாளர் வேண்டுகோளுக்கு அமைவாக கொரோனா இடைத் தங்கல் முகாமில் உள்ளவர்களுக்கு இந்த அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட்டன. (இ-213)

### கொரோனா விதிமீறல்



# கைது 10,413

கொழும்பு, மே 20

கொரோனாத் தொற்றுக்கால சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 10 ஆயிரத்து 413 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றும் 340 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் தற்போது நடைமுறையில் உள்ள அடையாள அட்டையின் இறுதி இலக்க முறையை மீறிய குற்றச்சாட்டில் 99 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர், அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் சுகாதாரக் கட்டுப்பாடுகள் தொடர்பாக பொலிஸாரின் கைது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செய்தி நிறுவனங்கள் மீது தாக்குதல்; சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும்

## இஸ்ரேல் - பலஸ்தீன் மோதல் குறித்து ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு அறிக்கை

**யாழ்ப்பாணம், மே 20**

**இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலால் செய்தி நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டடம் தகர்க்கப்பட்டமை மற்றும் பொதுமக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை சர்வதேச சமூகம் கடுமையாக கண்டிக்க வேண்டும் என்று ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் காஸாவில் அமைந்துள்ள சர்வதேச ஊடக அலுவலகங்கள் சேதமாகியுள்ளதுடன், ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பில் பெரும் அச்சுறுத்தல் நிலவுகின்றமை அவதானிக்கத்தக்கதாகும்.

சர்வதேச ஊடக நிறுவனங்களின் செய்தி அறிக்கைக்கு அமைய மே 13 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில், உள்நாட்டு ஊடக நிறுவனங்கள், அல்ஜசீரா மற்றும் அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டு காஸாவில் இயங்கி வரும் அஸோஸியேட்ட் பிரஸ் உட்பட 15 ஊடக நிறுவனங்கள் அமைந்துள்ள கோபுரம் முற்றிலுமாக தகர்க்கப்பட்டுள்ளன.

குறித்த கோபுரங்களில் ஊடக நிறுவனங்கள் அமைந்துள்ளமை அறிந்திருந்தும் ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கையை "ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு" தமது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

இரண்டாவது ஜெனிவா உடன்படிக்கையின் 13ஆவது பிரிவை மீறி காஸா மீது இஸ்ரேலால் மேற்கொள்ளப்படும் ஷெல் மற்றும் ராக்கெட் தாக்குதல்களில் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் கொல்லப்படுதல் சம்பவங்களானவை மிகவும் கண்டிக்கக் கூடிய நடவடிக்கைகளாகும்.

எனவே இஸ்ரேல் பலஸ்தீன் மோதல் காரணமாக பாதிப்புக்குள்ளான ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சர்வதேச ஊடகங்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் உட்பட சர்வதேச சமூகத்தையும் கேட்டு கொள்கின்றோம் -என்றுள்ளது. (ப)

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 - 11 - 1937



மறைவு
19 - 05 - 2021

## அமரர் கதிரவேலு திருநாவுக்கரசு B.A(Hons) S.L.P.S 1

**(ஓய்வு பெற்ற அதிபர், ஆனைக்கோட்டை உயரப்புலம் மெதடிஸ்ட்மிசன் த.க. பாடசாலை)**

மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட, கதிரவேலு திருநாவுக்கரசு அவர்கள் (ஓய்வுபெற்ற அதிபர், ஆனைக்கோட்டை உயரப்புலம் மெ.மி. த.க. பாடசாலை) நேற்று (19.05.2021) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தில்லையம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்ரமணியம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், வத்சலாவின் (பேபி) ஆருயிர்க் கணவனும், காலஞ்சென்ற கணேசு (அதிபர்), மற்றும் சரஸ்வதி, பஞ்சலிங்கம், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் தங்கலிங்கம், காலஞ்சென்ற புனிதவதி மற்றும் செல்வ ராணி ஆகியோரின், அன்புச் சகோதரரும், சுமாதினி (கனடா), சுகுணமதி (உதவி அதிபர், ஆனைக் கோட்டை றோ.க.த.க.பாடசாலை), கலானந்தி, திருவாகினி (முகாமையாளர், சமுர்த்தி வங்கி, காரைநகர்), ஞானானந்தன் (அவுஸ்ரேலியா), வித்தியானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்தவராஜா (அருண், கனடா), சுரேஸ், கண்ணன், சசிகுமார் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), சுலக்சனா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரிவேணி, யாதுளன், அக்ஷயன், ஆராதனா, ஆராதிகா, ஆருக்ஷன், கபிலன், முகிலன், அஷ்வின், ஆருக்ஷி, அதிஷ்ரன் ஆகியோரின் அன்பு பேரனும், ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.05.2021) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, பக்கஸ் லேன், உடுவில் வீதி, மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பிப்பிலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

சுமாதினி - 011-5145724635, சுகுணமதி - 077-6481521,
கலானந்தி- 076-5731203, திருவாகினி- 077-0325764,
ஞானானந்தன் - 0061-470268196, வித்தியானந்தன்- 0033-783144981



# சாரதிகளை பரிசோதிக்க உபகரணம்

கொழும்பு,மே 19

வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறும் சாரதிகளைப் பரிசோதிக்க புதிய உபகரணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஹெரோய்ன், கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளை உட்கொண்ட பின்னர் வாகனம் செலுத்தும் சாரதிகளைப் பரிசோதிப்பதற்காக இந்த உயர் தொழில்நுட்ப உபகரணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த உபகரணத்தைப் பயன்படுத்தி மேல் மாகாணத்தில் முதலில் சோதனைகள் ஆரம்பிக்கப்படும். அதேவேளை குறிப்பிட்ட வேக வரம்பை மீறி வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்ய அதிவேக நெடுஞ்சாலையில் லேசர் தொழில்நுட்பத்துடன் கூடிய வேக மீற்றர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் வாகனத்தின் வேகம் மற்றும் வாகனத்தின் புகைப்படமும் பிரதியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# பகுதியளவில் நிறைவுசெய்யப்பட்ட வீடுகளுக்கு நிதியை கொடுக்கவும்

## பிரதமர் வலியுறுத்து

கொழும்பு, மே 20

குறைந்த வருமானம் பெறுவோர், பகுதியளவில் கட்டுமான பணிகள் நிறைவு செய்த வீடுகள் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதியுதவி களைப் பெற்றுக்கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற குழு அறை 02 இல் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுவின் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.



இதன்போது, காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன சட்டவரைபின் திருத்த சட்டவரைபு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறி நிமல் பெரேராவால் ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது. (ப-இ)

# அசாத் சாலிக்கு மாரடைப்பு மருத்துவமனையில் சேர்ப்பு!

கொழும்பு, மே 20

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் உள்ள மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாகி மற்றும் அதற்குரிய தோட்டாக்கள் அவருடைய வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்டன. அதனையடுத்தே, கடந்த மார்ச் மாதம் அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

# ஈஸ்டர் தாக்குதல் பின்னணியில் இஸ்ரேலின் புலனாய்வு பிரிவு

## விசாரணைசெய்யுமாறு கோருகிறார் ஹக்கீம்!

கொழும்பு,மே 20

21/4 தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இஸ்ரேலின் புலனாய்வுப்பிரிவும் இருந்துள்ளது. இது தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது 21/4 தாக்குதல் சம்பவத்தை அடிப்படையாக வைத்து சபையில் எழுப்பட்டிருந்த கேள்விகளுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று பதிலளித்தார்.

அதன்பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே ஹக்கீம் இந்த கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 21/4 தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி குறித்து எனது உரையின்போது இதற்கு முன்னரும் சில கருத்துகளை வெளியிட்டுள்ளேன். இஸ்ரேலின் புலனாய்வு பிரிவு இதன்பின்னணியில் இருந்துள்ளது என்பதற்கான தகவல்கள் உள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இது பற்றியும் ஆராயப்பட வேண்டும்.

அதேவேளை, இளம் முஸ்லிம் கவிஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அரசின் இவ்வாறான அணுகுமுறையால் நம்பகத்தன்மையின்மை ஏற்படுகின்றது." என்றார்.(ஐ44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்தாளர்களாக நியமிக்கப்பட்டபோதும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை

## பாதிக்கப்பட்ட பணியாளர்கள் கவலை

**யாழ்ப்பாணம், மே 20**

**மருந்துக் கலவையாளர் பரீட்சையில் சித்தியடைந்து மருந்தாளர்களாக வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் 83 பணியாளர்களுக்கு இதுவரை முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் தெரிவிக்கையில்;

வடக்கு மாகாணத்தில் 2013 ஆம் ஆண்டு 3 கட்டங்களாக சுகாதாரப் பணி அலுவலர்களாக நியமனம் பெற்று, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள சித்த மத்திய மருந்தகம், கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை மற்றும் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை ஆகியவற்றில் மருந்தாளர்களாக பணிக்கு அமர்த்தப்பட்டோம். இதற்காக 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி தொடக்கம் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி வரை கைதடியில் உள்ள சித்த போதனா வைத்தியசாலையில் விசேட மருந்தாளர் பயிற்சியும் பரீட்சையும் இடம்பெற்று சித்தியடைந்தோம்.

இன்று வரையில் எமக்காக உறுதியளிக்கப்பட்ட மருந்தாளர் நியமனம் மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்படாது வேதன ஏற்றம், வகுப்பேற்றம் மற்றும் பதவி உறுதிப்படுத்தல் இன்றி முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். மேலும் எமக்கான முறையான சேவைப் பிரமாணக் குறிப்பு இன்றி உள்ளமை பெருங்குறையாகும். இதுவரை எமது கையில் எந்த விதமான சேவைப் பிரமாணக் குறிப்பும் இல்லை. அத்துடன் எமக்கான சம்பளப் படிநிலையானது பிஎல் ஒன்றில் எவ்வித முன்னேற்றமின்றித் தொடர்ந்துள்ளது. எனவே கடந்த 4 வருடங்களாக எமக்கான நிவாரணம் கிடைக்காத நிலையில் அடுத்தவாரம் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை ஒருங்கிணைந்த அடிப்படையில் அனைவரும் சந்தித்து தீர்வு காணவுள்ளோம் - என்றனர். (ப-50)

# ஆயுள்வேத மருத்துவர்களுக்கு தடுப்பூசி போடப்படவில்லை

யாழ்ப்பாணம்,மே 20

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் மத்திய அரசாங்கம் ஆயுள்வேத மருத்துவமனைகளை தயார்படுத்துமாறு அறிவித்துள்ளது. இந்த நிலையில் இதுவரை வடமாகாண சித்த ஆயுள்வேத மருத்துவர்களுக்கு தடுப்பூசி போடப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புத்தாண்டு கொத்தணியின் தாக்கம் வடமாகாணத்திலும் கணிசமான கொரோனா நோயாளிகளை உருவாக்கியுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் மட்டும் இவ்வாரம் 300 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதாரத்துறை மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் செயற்பட்டு வருகின்ற அதே வேளையில், வடக்கு மாகாண சுகாதாரத் துறையின் கீழ் இயங்கி வரும் சுதேச மருத்துவ திணைக்களத்தைச் சார்ந்த மருத்துவர்களுக்கு கொரோனா தொடர்பான தடுப்பூசி ஏற்றப்படாது, முகக்கவசங்கள் வழங்கப்படாத நிலையில் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் பணிபுரிந்து வருகின்றனர்.

குறிப்பாக தனியே ஒரு மருத்துவர் பணிபுரியும் இடங்களில் மாற்று வழியின்றி தொடர்ந்து பணிபுரிய வேண்டிய நிலைகளில் உள்ளனர்.

இந்நிலையில் சித்த ஆயுள்வேத மருத்துவர்களுக்கு உடனடியாக தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-20)

# முதிரை மரக்குற்றிகளை கடத்தியவர் கைதானார்

வவுனியா,மே 20

சட்டவிரோதமான முறையில் முதிரை மரக்குற்றிகளை கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வேலங்குளம் பகுதியில் இருந்து,வவுனியா நகர்நோக்கி மரங்களை ஏற்றிச்சென்ற வாகனத்தை பம்பைமடுவில் கடமையில் நின்ற பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டனர். இதன்போது சட்டவிரோதமான முறையில் முதிரை மரக்குற்றிகள் கடத்திச்செல்லப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து மரங்களை ஏற்றி வந்த வாகனச்சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன்,மரங்களை கடத்தியதற்கு பயன்படுத்தப்பட்ட கன்ரர் வாகனத்தையும்,13 மரக்குற்றிகளையும் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பூவரசம் குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-110)



# தாலிக்கொடி அறுப்பு: இருவர் நேற்று கைது

வவுனியா,மே 20

வவுனியாவில் பெண்ணின் தாலிக்கொடி அறுப்பு சம்பவம் தொடர்பில் இருவரை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

வவுனியா பண்டாரிக்குளம் மாடசாமி கோவிலடி குளக்கட்டு வீதியில் நேற்றுமுன்தினம் மாலை நடந்து சென்று கொண்டிருந்த 58 வயதுடைய பெண்ணின் தாலிக்கொடியை இனந்தெரியாத நபர் ஒருவர் அறுத்துச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரையும், தோணிக்கல் பகுதியயைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து இரண்டரைப் பவுண் தாலிக்கொடியும் மீட்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-18)

# கொரோனாவை விரட்ட இணுவிலில் வழிபாடு

யாழ்ப்பாணம்,மே 20

உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் இணுவில் காரைக்கால் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் சுவாமி ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் முதன்மைக் குரு மந்திரம் கிரியா சுரபி சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் நடைபெறவுள்ளன. (ஐ)

# மருந்து வழங்கல் நாள் மாற்றம்

சாவகச்சேரி மே. 20

சாவகச்சேரி கால்நடை மருத்துவர் அலுவலகத்தில் நாளை 21 ஆம் திகதி தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் கோழிகளுக்கான மருந்துகள் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பிரதி சனிக்கிழமைகளில் கோழிகளுக்கான மருந்துகள் விநியோகம் இடம்பெற்று வந்தது. தற்போதைய காலநிலையை கருத்திற் கொண்டு வெள்ளிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது என கால்நடை மருத்துவர் பணியகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9 )

# சி.ஐ.டியினர் என்று கூறி கொடிகாமத்தில் கொள்ளை

தென்மராட்சி, மே 20

தாம் சி.ஐ.டி.யினர் என்றும் பயணப் பொதிக்குள் கஞ்சா இருக்கின்றது, அதனைச் சோதனையிடவேண்டும் எனவும் தெரிவித்த ஆசாமிகள், பயணப் பொதியில் இருந்த பணத்தைப் பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் ஏ-9 வீதியில் கொடிகாமம் கொயிலாமனைச் சந்திக்கு அருகில் அண்மையில் நடைபெற்றது.

மீசாலையைச் சேர்ந்த 75 வயது முதியவர் கொடிகாமத்தில் உள்ள உறவினரைப் பார்வையிட கைப்பையை தோளில் போட்டுக் கொண்டு சைக்கிளில் சென்றுள்ளார். கொயிலாமனைச் சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முதியவரை மறித்து தம்மை சி.ஐ.டி.யினர் எனத் தெரிவித்து கைப்பையில் கஞ்சா உள்ளதா எனக் கேட்டுள்ளனர்.

முதியவர் இல்லையெனக் கூறியபோது கைப்பையைப் பறித்து சோதனையிட்டு கைப்பைக்குள்ளிருந்த 2 ஆயிரத்து 400 ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

அப்பகுதியில் குடியிருப்புகள் அற்ற நிலையிலும் ஏ 9 வீதியில் சனநடமாட்டம் இல்லாத நிலையிலும் உதவி கோர முடியாத நிலையில் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தைப் பதிவு செய்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று முதியவர் தெரிவித்தார். (ஒ,9)

# வெடிபொருள்கள் பளையில் மீட்பு

கிளிநொச்சி, மே 20

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆட்டிவெட்டை எனும் பகுதியில் கடந்த திங்கட்கிழமை தனிநபர் ஒருவர் தனது காணியை துப்பரவுசெய்து குப்பைக்கு தீ வைத்தபோது குண்டு ஒன்று வெடித்தது. இருப்பினும் எவருக்கும் எதுவித சேதமும் இடம்பெற்றிருக்கவில்லை. குறித்த இடத்தில் நேற்று அதே இடத்தில் பழைய வெடிபொருள்கள் காணி உரிமையாளரால் அவதானிக்கப்பட்டு பொலிசார் மற்றும் இராணுவத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வெடிபொருள்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் நேற்று 137 தொற்று யாழில் மட்டும் 69 பேருக்கு

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 69 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 137 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 840 பேரின் மாதிரிகள் இன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 137 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 69 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 23 பேரும் வவுனியா மாவட்டத்தில் 3 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 பேரும் என 137 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் ஒருவருக்கு தொற்றுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

**ஆடைத் தொழிற்சாலையில் 38**
புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் 38 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. முல்லைத்தீவு வைத்தியசாலையில் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**கரைச்சி பிரிவில் 06**
கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி மருத்துவமனை 16**
கிளிநொச்சி வைத்தியசாலையில் 16 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 9 பேர் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள்.

**வவுனியாவில் 03**
வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**மன்னார் 02**
மன்னார் வைத்தியசாலையில் இருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**யாழ். போதனாவில் 06**
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கு கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளடமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**பருத்தித்துறை 05**
பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 5 பேருக்கும் கோப்பாய் வைத்தியசாலையில் இருவருக்கும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நான்கு பேருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**சாவகச்சேரி 28**
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 28 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு**
யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும் காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது." என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.
(த-26)

## பிந்திய செய்தி

யாழ்ப்பாணம், மே 20
வவுனியா நகர சபை உறுப்பினர்களை பதவி விலகுமாறு மாவட்ட கிளை என்ற அடிப்படையில் தான் கூறியிருந்தேன் என்று வெளியாகிய செய்தியில் உண்மை இல்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட தலைவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.
அவர் கூறியிருந்தார் என்று முன்னர் வெளியான செய்தி உதயனின் முதலாம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.
இந்த நிலையில், முன்னர் வந்த அந்தச் செய்தியில் உண்மையில்லை என்றும் சத்தியலிங்கம் நேற்று நள்ளிரவு மறுத்துள்ளார்.
(த-110)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் 31.12.2020 வரை
அபிவிருத்தி உத்தியோகத்தராகக்
கடமையாற்றிய வரும் 14.05.2021 அன்று
அகால மரண மடைந்தவருமான

**செல்வி கௌரி குமரன்**


அவர்களிற்கு எமது கண்ணீர் அஞ்சலி
யினை காணிக்கையாக்கி அன்னாரின்
ஆன்ம சாந்திக்காக இறைவனை
வேண்டுகின்றோம்



ஊழியர் நலன் புரிச்சங்கம்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 04 . 1921



மறைவு 19 . 05 . 2021

### ஆறுமுகம் நடராசா

கோப்பாயை பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா நேற்று (19.05.2021) புதன்கிழமை காலமானார்.
அன்னார் திரவியத்தின் அன்புக் கணவரும், ஜெயக்குமார் (கனடா), சிவகுமார் (கொலண்ட்), உதயகுமார் (கனடா), காலஞ்சென்ற சுகுமார், விஜயகுமார் (மல்லாகம்), புஸ்பமாலா (மல்லாகம்), மதிமாலா (கொழும்பு) மற்றும் காலஞ்சென்ற வசந்தமாலா ஆகியோரின் பாசமிகு தகப்பனும், கஜன், தஜன், கபிந்தன், மதுஷா, சுபாயினி, ஷ்ருதிகா, எப்சிபா, ஷலோமி, அமினா, சுமாயா, கதிர் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.
**அன்னாரின் பூதவுடல் இன்று (20.05.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் யாழ்ப்பாணம் மணியம் தோட்டத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

தகவல்
தா.புஸ்பமாலா
(0775 437 406)

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 08 . 1959



இறப்பு 19 . 05 . 2021

### திருமதி பரமேஸ்வரி (பவா) ஜெயரவீந்திரன்

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இந்தியா வலசரவாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி (பவா) ஜெயரவீந்திரன் நேற்று (19.05.2021) புதன்கிழமை காலமானார்.
அன்னார் ஜெயரவீந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பூதப்பிள்ளை கதிரப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி காசிநாதன் தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்வலட்சுமி, தங்கம்மா, காசிநாதர், கனகநாயகம் மற்றும் சிவபாக்கியம், செல்வநாயகம், வைரவநாதன், வைத்தியநாதன், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயகிரிதாஸன், றஞ்சினிதாஸ், மோகனமூர்த்தி, காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் தயாளினி, வதனமாலினி ஆகியோரின் பாசமிகு அண்ணியும், சுதர்சினி (பிரித்தானியா), துளசிராஜ் (பிரித்தானியா), ரவிராஜ் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யசிதரன் (U.K), கஜனி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வரஷா, லியாரா ஆகியோரின் ஆசை அம்மம்மாவும், யுகனின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வலசரவாக்கம் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் 1.30 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

| | | |
|---|---|---|
| ஜெயரவீந்திரன் | - கணவர் - இந்தியா | - 0091 9380196622 |
| ரவிராஜ் | - மகன் - இந்தியா | 00919789920257 |
| சுதர்சினி | - மகள் - U.K | - 00447478771560 |
| துளசிராஜ் | - மகன் - U.K | - 0044 7792908581 |
| யசிதரன் | - மருமகன் U.K | - 0044 7931985275 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பெறுகை மீள் அறிவித்தல்
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை; சுழிபுரம்**
**சபைநிதி - 2021**

சபைநிதி வேலைத்திட்டங்களுக்கு 25.05.2021 ஆம் திகதி கேள்வி திறக்கப்படும் என 10.05.2021 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. எனினும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக 24.05.2021 மற்றும் 25.05.2021 ஆம் திகதிகள் அரச விடுமுறையாகவுள்ளதால் 31.05.2021 ஆம் திகதி வரை கேள்வி ஆவணம் விநியோகிக்கப்படும் என்பதுடன் 01.06.2021 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கேள்வி திறக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

த.நடனேந்திரன்
தலைவர்,
**20.05.2021** பெறுகைக் குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## 3ஆம் ஆண்டுநினைவஞ்சலி

தோற்றம் 13 • 09 • 1947



மறைவு 20 • 05 • 2018

### அமரர் சின்னத்தம்பி பொன்னம்பலம்
(மகாலிங்கம் - சுதுமலை)
(கார் உரிமையாளர் - சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம்)

திதி : பூர்வபக்க ஷஷ்டி (17.05.2021)

ஆண்டு மூன்று மறைந்து விட்டது அப்பா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்கமுடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள்
தொடரும். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஏழாலை மேற்கு, சுன்னாகம் — குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 • 04 • 1938



மறைவு 19 • 05 • 2021

### நாகலிங்கம் குலநாயகம்

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குலநாயகம் நேற்று (19.05.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற பரியாரி நாகலிங்கம் அன்னம்மா தம்பதியரின் மகனும், இளையதம்பி ஆச்சிக்குட்டி தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் கணவரும், காலஞ்சென்ற ராசசுந்தரம், தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரனும், தவசீலன், தீபன், நிஷா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், றமணன், ஜிவிதா ஆகியோரின் மாமனாரும், அகல்யா, ஆதிரியன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற பாலசிங்கம், கையிலாயபிள்ளை, தவராசா, இராசாம்பிகை, தர்மராசா, தவலிங்கம் மற்றும் துரைசிங்கம், கமலாகரன், உமாதேவி, ஜெயலக்ட்சிமி, யோகா, பூமணி, ஜோதிகா ஆகியோரின் மைத்துனரும், ஜீவாநந்தம், வானதி, மாதினி, பாமதி, சிவா, தயா, அன்பரசி, கிளி, அபரஞ்சி, கிரிசாந், ராஜ்பவன், தீட்சனா, கீர்த்தனா, அனந்தஜித் ஆகியோரின் மாமனாரும், தமிழ்மாறன், தமிழ்செல்வன், ய்சோசுசி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2021) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செட்டி வளவு, இணுவில். — குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள்



தோற்றம் 24 • 07 • 1944

மறைவு 19 • 05 • 2021

**இணுவில் கந்தசுவாமி கோவில்**
**பிரதம குரு சிவஸ்ரீ**
நடராஜக்குருக்கள்
உருத்திரமூர்த்திக் குருக்கள்
அவர்கள் நேற்று (19.05.2021) புதன் கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இணுவில் கந்தசுவாமி கோவில்**
**அறங்காவல் சபையினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொறுப்பற்ற அரசால் மக்களுக்கே துன்பம்

## அகிலவிராஜ் சுட்டிக்காட்டு



**கொழும்பு, மே 20**

**கொரோனாவைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் அரசு பொறுப்புடன் செயற்படவில்லை. இதனால் மக்களே துன்பத்தை அனுபவிக்கின்றனர்.**

மருத்துவமனைகள் தொற்றாளர்களால் நிரம்பியுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் 10 மில்லியன் கொவிட் தடுப்பூசிகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே அவற்றைக் கொள்வனவு செய்வதற்குத் தனியார் துறையினர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதியளிக்குமாறு பல தனியார் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்தன. ஆனால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதேவேளை சுகாதாரக் கட்டுப்பாடுகளையும் மீறி இந்தியாவிலிருந்து 3 ஆயிரம் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். இன்றும் மக்களே துன்பத்தை அனுபவிக்கின்றனர். - என்றார். (எ-4)

# பேரழிவு தரக்கூடிய மோதல் வேண்டாமாம்

## இஸ்ரேல், பலஸ்தீனத்துக்கு அறிவுரை சொல்கிறார் மஹிந்த



கொழும்பு,மே 20

உலகுக்கே பேரழிவு தரக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தாமல், போர் நிறுத்தத்துக்கான பேச்சுக்கு செல்லுங்கள் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று பலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி காலனித்துவத்தின் விளைவாகும். இந்தப் பிராந்திய மக்கள் இறையாண்மையை இழந்த காரணத்தால் மோதல் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் நீண்டகால ஆதரவாளர் என்ற வகையில், பலஸ்தீனிய மக்களுக்கு ஒரு நியாயமான உரிமை உறுதிசெய்யப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடாகும்.

விதிவிலக்கான மக்கள் என்ற வகையில் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு, அந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மிக முக்கியமான பணியாகும்.

பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் மக்களுக்கு மிகவும் முக்கியமான பாதுகாப்பு தேவைகள் மற்றும் நியாயத்தன்மையைப் பற்றி நன்கு புரிந்துகொள்வது அத்தியவசியமானதாகும்.

இது போன்ற சூழ்நிலையில் நிம்மதியாக வாழ்வதற்கு பாதுகாப்பான மற்றும் பரஸ்பர ஏற்றுக்கொள்ளலை இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன மக்களால் பேச்சுக்கள் மூலம் அது நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பது இலங்கையின் நிலைப்பாடாகும்.

இரு தரப்பினரும் முறையான அபிலாஷைகளை நோக்கிச் செயற்பட்டு நிலையான அமைதியை அடைய முடியும் - என்றுள்ளது. (எ-4)

# வெலிக்கடை சிறைச்சாலை இடமாற்றம்

கொழும்பு, மே 20

வெலிக்கடை சிறைச்சாலை ஹொரன பிரதேசத்துக்கு இடமாற்றப்படவுள்ளது. இதனையடுத்து சிறைச்சாலை தற்போது அமைந்துள்ள காணி அபிவிருத்தித் திட்டத்துக்காக பயன்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக சிறைச்சாலை அமைந்துள்ள காணியை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு விட அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந் நிலையில் வெலிக்கடை சிறைச்சாலை ஹொரனவிலுள்ள 200 ஏக்கர் காணிக்கு மாற்றப்படவுள்ளது. (ம-4)

# துரைரெட்ணசிங்கத்தின் இழப்பு தமிழ் மக்களுக்கு பேரிழப்பு

## கூட்டமைப்பின் தலைவர் இரங்கல்



யாழ்ப்பாணம், மே 20

தமிழ் மக்களின் கல்விச் சேவைக்கும், தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் செயற்பாடுகளுக்கும் மிகவும் உறுதுணையாகச் செயற்பட்ட திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கத்தின் திடீர் இழப்பு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், சேனையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைரெட்ணசிங்கம் சேனையூர் மத்திய கல்லூரியின் வளர்ச்சியிலும், மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகித்தவர். அன்னார் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து பல தடவைகள் நாடாளுமன்றம் சென்று தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் எழுப்பியவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் மற்றும் அதன் வளர்ச்சிக்கும் மிகவும் உறுதுணையாக நின்று செயற்பட்டவர். அன்னாரின் இழப்பு தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும் - என்றுள்ளது. (ப)

# பலஸ்தீனம் மீதான திட்டமிட்ட இன அழிப்பு நிறுத்தப்பட வேண்டும்

## சஜித் பிரேமதாச சபையில் தெரிவிப்பு



கொழும்பு,மே 20

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இரு இராச்சியங்களாக அங்கீகரிக்கப்பட்டு மத்திய கிழக்கில் உருவாகியுள்ள அதிகார போராட்டத்துக்கு தீர்வு காணப்படுவதுடன், பலஸ்தீனம் மீதான திட்டமிட்ட இன அழிப்பை மேற்கொள்ளும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றின்போதே அவர் இவ்வாறானதொரு கருத்தொன்றை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

காஸா பகுதியில் இஸ்ரேல் - பலஸ்தீன மோதலின் காரணமாக பலஸ்தீன் பகுதியில் மிகப் பெரும் அளவான இன அழிப்பு இடம்பெற்று வருகின்றது. இது உண்மையில் ஒரு இன அழிப்பாகும். இந்த பிரச்சினைக்கு இருக்கும் ஒரே தீர்வு இரு இராச்சிய உருவாக்கமாகும். இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இரு இராச்சியங்களாக அங்கீகரிக்கப்பட்டு மத்திய கிழக்கில் உருவாகியுள்ள அதிகார போராட்டத்துக்கு தீர்வு காணப்படவேண்டும். அதேபோல் பாதிக்கப்பட்ட பலஸ்தீன மக்களுக்காக நாம் குரல் கொடுக்கின்றோம். அதுமட்டுமல்ல ஹிட்லர் காலத்தில் யூதர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பும் மறந்துவிடக்கூடாது. அதனையும் நாம் நினைவுபடுத்துகின்றோம். எனவே இப்போதுள்ள நிலையில் இரு நாடுகள் உருவாக்கப்பட்டு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். - என்றார். (ஐ-இ)

# சர்ச்சையான தே.எண்ணெய் முழுவதும் மீள் ஏற்றுமதி

கொழும்பு, மே 20

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பதார்த்தம் கலந்திருந்ததை உறுதிப்படுத்திய தேங்காய் எண்ணெய் கொள்கலன்கள் அனைத்தும் மீள ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்று வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மிலின் கேள்விக்கு பதில் அளிக்கும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

புற்றுநோயை உண்டாக்கும் என்று கண்டறியப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் எதுவும் சந்தைக்கு விநியோகிக்கப்படவில்லை. இதனை சுங்கப் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார். அவை அனைத்தும் மீள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம-4)

# இனவாதம் தூண்டுவது நீங்களா? நாங்களா?

## சாணக்கியன் சபையில் முழக்கம்

கொழும்பு, மே 20

இனவாதத்தைத் தூண்டுவது நீங்களா? நாங்களா?. மக்களின் தேவைகளை எடுத்துக் கூறினால் நாம் இனவாதியா? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கேள்வி நேரத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சுமார் 500 மாதிரிகளின் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றன. மட்டக்களப்பு மருத்துவமனையில் ஒட்சிசன் வழங்குவதற்கான வசதிகள் இல்லை. நோயாளர் காவு வண்டிக்காக 194 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று அறியக் கிடைத்துள்ளது. அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாண மக்களுக்கு ஏன் நீங்கள் வேற்றுமை காட்டுகின்றீர்கள்?. இவ்வாறு மக்களின் தேவைகளை எடுத்துக் கூறினால் நாம் இனவாதியா? என்றார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர், அரசால் கொரோனா ஒழிப்புக்குத் தேவையான நிதி வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. பி.சி.ஆர். பரிசோதனை வசதிகளை அதிகரிக்கவுள்ளோம். பரிசோதனைக்கூடங்களை அதிகரிக்கவும், 24 மணித்தியாலங்கள் வரை சேவையில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய பக்தர்களுக்கான அறிவித்தல்..!!

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தில் வருடாந்தம் இடம்பெறுகின்ற வேள்வி பொங்கல் விழாவுக்கான விளக்கு வைத்தல் உற்சவம் எதிர்வரும் 21ம் திகதி வெள்ளிக் கிழமையும், வேள்வி பொங்கல் விழா எதிர்வரும் 29ம் திகதி சனிக்கிழமையும், எட்டாம் மடை பொங்கல் உற்சவம் எதிர்வரும் 04ம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ள நிலையில், நாட்டில் தற்போது இருக்கின்ற கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக பக்தர்கள் எவருக்கும் மேற்குறித்த உற்சவங்களில் பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

குறிப்பு:- வேள்வி பொங்கல் விழா நடைபெறும் தினத்திலோ, எட்டாம் மடை பொங்கல் நடைபெறும் தினத்திலோ பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தருவதையோ, நேர்த்திக் கடமைகளுக் காக கிடாய்கள், சேவல்கள் போன்றவற்றை ஆலய வளாகத் துக்குள் கொண்டுவருவதையோ, பொங்கல் மடை பரவுதலில் ஈடுபடுவதையோ தயவுகூர்ந்து தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**- தர்மகர்த்தா -**

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழாக அறிவித்தல்

1. வேல்விழி சூரியகுமார்
2. வெற்றிவேல் சூரியகுமார்

இருவரும் UN ஆசிரியர் வீட்டுத்திட்டம், ஓமந்தை, வவுனியா.

வழக்காளிகள்

**வழ.இல:நானாவிதம்/376/2021**

**எதிர்**

01. சி.கயிலைநாதன்
02. க.ச.சோமஸ்கந்தகுருக்கள்
03. கா.சந்திரபாலன்
04. தி.பொன்னம்பலவாணர்
05. சு.சிற்றம்பலம்
06. செ.செல்வரத்தினம்
07. த.சோரங்கன்
08. திருமதி.ச.சந்திரராசா
09. க.வசந்தரூபன்
10. இ.அமிர்தகுமார்
11. சு.சிறினிவாசன்
12. கி.பத்மநாதன்
13. இ.உமணகேனன்
14. சா.யதுகுலன்
15. க.மாலிங்கம்
16. தி.வினோகரன்
17. கு.சிவசுந்தரம்
18. ஐ.தம்பிராசா
19. தா.சிவராசா
20. கு.அஞ்சனன்
21. கு.சுரேஸ்வரன்
22. இ.துரைராசா
23. சி.தாமோதரநாதன்
24. இ.ஸ்ரீரங்கன்
25. Prof.செ.கண்ணதாசன்
26. ப.கயிலைநாதன்
27. மு.குமாரவேற்பிள்ளை
28. நா.திருக்குமரன்
29. கே.நித்தியானந்தம்
30. க.கோபாலு
31. சுபத்திரா
32. சி.புருசோத்தமன்
33. Dr.தி.சுதர்மன்
34. Dr.கு.குருபரன்

அனைவரும் நிர்வாகசபை உறுப்பினர்கள் பொன்னாலை ஸ்ரீவரதராஜா பெருமாள், தேவஸ்தான பரிபாலன சபை, பொன்னாலை, சுழிபுரம், யாழ்ப்பாணம்.

**எதிராளிகள்**

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளால், மேலே குறிப் பிடப்பட்ட 1-34 வரையான எதிராளிகளுக்கு எதிராக பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் திருக் கல்யாண உற்சவத்தினை வழக்காளிகளுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே குறித்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் திருக்கல்யாண உற்சவம் தொடர்பில் அக்க றையுடைய எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறி வித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது 04.06.2021ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக் கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

2021ஆம் ஆண்டு .....5.. மாதம் ...19...ஆம் திகதி

**வரைவு**
**வழக்காளிகள்**
**சட்டத்தரணி**

**மன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம் மல்லாகம்.**

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் சின்னையா ஞானச்சந்திரமூர்த்தி**
(ஓய்வு நிலை ஆசிரியர்)

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ் தான பரிபாலன சபையின் உருவாக்கத்திற்கு உந்து சக்தியாக உழைத்தவரும், சபையின் முதலாவது செயலாளரும், தேவஸ்தான வளர்ச்சியில் அரும் பெரும் சேவையாற்றியவருமான அமரர் சின்னையா ஞானச்சந்திரமூர்த்தி அவர்களின் மறைவு எம்மை மிகுந்த கவலையடையச் செய்துள்ளது. அவர் ஆற்றிய சேவைகளை நாம் ஒரு போதும் மறக்கமுடியாது. அல்லும் பகலும் அம்பாளின் அடியவனாக வழிபட்டு வந்த அமரர் ஞானச்சந்திரமூர்த்தி அவர்களின் ஆத்மா அம்பாளின் பாதார விந்தங்களில் போய்ச் சேரும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**வழக்கம்பரை,**
**தொல்புரம்,**
**சுழிபுரம்.**

**பரிபாலன சபை**
**தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன்**
**தேவஸ்தானம்**

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் சின்னையா ஞானச்சந்திரமூர்த்தி**
(இளைப்பாறிய ஆசிரியர்)

தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளை நிதியத்தின் ஆரம்ப கர்த்தாவும், போசகருமாகிய, பொறியியலாளர், ஞானச்சந்திரமூர்த்தி சின்னையா மற்றும் நிதியத்தின் போசகரும், இருதய சத்திர சிகிச்சை நிபுணர், வைத்திய கலாநிதி ஞானச்சந்திர மூர்த்தி காந்திஜி ஆகியோரின் அன்புத் தந்தையாரின் மரணம் எம் எல்லோரையும் ஆழ்ந்த கவலை யடையச் செய்துள்ளது. தானும் வாழ்ந்து, தன் நாட்டில் நலிந்து வாழுகின்ற மக்களையும் இயன்றவரை நன்றாய் வாழ வைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் சேவை செய்யும் திரு.ஞா.சின்னையா அவர்களுக்கும் Dr. ஞா.காந்திஜி அவர்களுக்கும், மற்றும் குடும்பத்தினருக்கும் நாம் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**வழக்கம்பரை,**
**தொல்புரம், சுழிபுரம்.**

**தொல்புரம் வழக்கம்பரை அம்பாள்**
**அறக்கட்டளை நிதியம்**

## துயர் பகிர்கின்றோம்



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளராக கடமையாற்றும் **திருமதி சசிக்குமார் திருவாகினி** அவர்களின் பாசமிகு தந்தை

**திரு. கதிரவேலு திருநாவுக்கரசு**

அவர்கள் நேற்று (19.05.2021) புதன் கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05. 2021) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் தவிக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**பிரதேச செயலகம், காரைநகர்.**

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம், சுன்னாகம்.
வட்டாரம் 05, மயானவீதி 1ம் ஒழுங்கை,
ஆதன இல - 28/49

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட மயானவீதி 1ம் ஒழுங்கை, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம்-05, மயானவீதி 1ம் ஒழுங்கை, ஆதன இல:28/49ல் உள்ள ஆதனம் வேலுப்பிள்ளை ராஜ லக்ஸ்மி எனும் பெயரில் உள்ளது. பிரசித்த நொத்தாரிசு செல்வி.கிருஸ்ண வேணி சந்திரலிங்கம் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தற்போது வலிகாமம் தெற்குப்பகுதி, உடுவில் கோவிற்பற்று கந்தரோடை இறை, வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு, J/200 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "சங்காவத்தை" எனக்குறிப் பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 01 குளி 02.27 உடைய ஆதனமானது 2011.11.27 ஆம் திகதிய 530 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப் பட்டுள்ளது. அதன் எல்லைகளாக, கிழக்கு- சிவஞானம் பாக்கியநாதனின் ஆதனம் வடக்கு- அன்பழகன் பெண் யசோதாவின் ஆதனம் மேற்கு- கை ஒழுங்கை தெற்கு- ஒழுங்கையும், பொன்னுத்துரை உதயகுமாரின் ஆதன மும் மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.K.சிவானந்தன் அவர்களால் 2021.03.19இல் அளந்து தயாரிக்கப்பட்ட 5400 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 01 குளி 0.49 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு திருமதி. சுதா கஜேந்திரகுமார் அவர்கள் மூலம் 2017.07.20 ஆம் திகதிய 2257 ஆம் இலக்க அறுதி உறுதியால், கற்பக்குளை, கந்தரோடை, மயான வீதி, சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த பொன்னுத்துரை சந்திரகுமார் (653451997V) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்ப வர்கள், அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் - எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது பொன்னுத்துரை சந்திரகுமார் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.
சுன்னாகம்.

### நகைகள்....

நகைகளை வாங்கினார் என்ற குற்றச்சாட் டில் ஒருவருமாக மூவர் கைதுசெய்யப்பட் டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸார் தெரிவித் தனர்.

கோவிலிலிருந்து திருடப்பட்ட நகைகள் உருக்கப்பட்ட நிலையிலும், கோபுரக் கலசம் ஒன்று வெட்டப்பட்ட நிலையிலும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் சந்தேகநபர்களி டமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 9ஆம் திகதி திருட்டு இடம்பெற்றிருந்தது. சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலை யத் தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெ டுத்த யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான யாழ்ப்பா ணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸ்ஸின் வழிகாட்ட லில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலை மையிலான அணி, திருட்டுத் தொடர்பில் விசாரணை முன்னெடுத்தது.

அதன்படி, தாவடியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசா ரணையின்படி பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைத் தொழிலகம் ஒன்றில் ஒருவர் கைது செய்யப்பட்டார். திருடப்பட்ட மேற்குறித்த பொருள்களும் மீட்கப்பட்டன. குறித்த சந்தேக நபர்கள் பல்வேறு கொள்ளை மற்றும் திருட்டுக் களில் ஈடுபட்டனரா என்பது தொடர்பில் விசார ணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (கு-26)

### தமிழரசின்...

அறிவித்துள்ளது. வவுனியா நகரசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட தமிழ் அரசுக் கட்சி 5 வட்டாரங் களிலும், புளொட் இரண்டு வட்டாரங்களிலும் வெற்றி பெற்றதுடன் போனஸ் ஆசனத்தை ரெலோ தனதாக்கியது. இந்தநிலையில், வவுனியா நகரசபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் 5 பேரில் இறம்பைக்குளம் வட்டார உறுப்பினர் செந்தில்ரூபன் கட்சி தாவிய நிலையில் அவர் நீக்கப்பட்டு அவரு டைய இடத்துக்கு கிறிஸ்தோபர் நியமிக்கப்பட்டி ருந்தார். ஏனைய வட்டார உறுப்பினர்கள் 4 பேரும் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்ற நிலையில் மேற்படி கோரிக்கை விடுக்கப் பட் டுள்ளது. (த-110,18)

### புதுக்குடியிருப்பு...

சாலையில் கொரோனாக் கொத்தணி கண்ட றியப்பட்டுள்ள நிலையில், அங்கு பணியாற் றும் 422 பேர் பரிசோதனைக்கு வராமல் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

ஆடைத் தொழிற்சாலையில் கடந்த 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோத னையில் 266 பேருக்கு தொற்று உறுதிப்ப டுத்தப்பட்டது. ஆடைத் தொழிற்சாலையில் இதுவரையில் 326 பேருக்கு தொற்று உறு திப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை அங்கு பணியாற்றும் 422 பேர் இதுவரை பரிசோத னைக்கு வராமல் தலைமறைவாகியுள்ளனர். இவர்களது விவரங்கள் இராணுவத்தின ருக்கு வழங்கப்பட்டு அவர்களை வீடுகளில் தனிமைப்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறியமுடிகின் றது. (ஓ.5)

## திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளுக்கு எமது திருமண சேவையை நாடுங்கள் விரைவாக நிறைவேற்றி கொடுக்கப்படும் (பதிவுகள் இலவசம்)

**தொடர்பு 077 078 3832**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் உள்ள

- மேசன்
- கூலியாட்கள்
- வெல்டர்
- தச்சுவேலைசெய்வோர்
- தொழிநுட்ப உத்தியோகத்தர் (T.O)

தேவை.

தொடர்பு:076 316 5734, 077 985 1946
e.mail: jenoshanark@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அராலி ஆவரம்பிட்டி

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவ தின

# விசேட அறிவித்தல்

**அம்பிகை அடியார்களே!**

- தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அதி தீவிர கொரோனா தொற்று காரணமாக வருடாந்த மகோற்சவமானது 21.05.2021 - 29.05.2021 வரையான காலப்பகுதியில் நடைபெறமாட்டாது.
- அத்துடன் இக்காலப்பகுதியில் ஆலய உள், வெளிச் சூழல்களில் மகோற்சவ கால செயற்பாடுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமாட்டாது.
- இம்மகோற்சவ காலத்தில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தருவதை முற்றாக தவிர்த்து கொள்ளவும்.
- மேலும் அடியார்கள் அனைவரும் தமது இல்லங்களில் இருந்து இக்காலப்பகுதியில் அம்பிகையை பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பரிபாலன சபையினர்**

University of Jaffna, Sri Lanka
Faculty of Allied Health Sciences
University Admissions - Academic Year 2020/2021

## Bachelor of Science (Honours) in Physical Education

### MEDIUM: ENGLISH

Applications are hereby invited to follow the above Degree Programme from suitable candidates who possess the minimum University admission requirements for the academic year 2020/2021.

**Eligibility for Admissions**
Those who wish to follow the Bachelor of Science (Honours) in Physical Education should have obtained atleast three "S" grades in any three subjects at G.C.E (A/L) exam 2020 in a stream and minimum marks of 30 for the Common General Paper within three attempts.

**Method of Evaluation**
Applications will be evaluated as proposed below:

| | |
|---|---|
| **Theory test** | To evaluate candidates' knowledge related to Physical Education |
| **Practical Test** | To evaluate candidates' physical fitness and playing ability |
| **Previous Sports Achievements** | Marks will be allocated for previous sports achievements. Candidates should upload scanned copies of certificates of their highest sports achievements along with their applications (details are available in the application form). |

Candidates who apply for Bachelor of Science (Honours) in Physical Education should sit for an Aptitude Test which would be conducted jointly by the University of Jaffna and Sabaragamuwa University of Sri Lanka. The Aptitude Test will be conducted in English. Due to the COVID–19 pandemic situation selection test will be conducted via online.

**Submission of Application**
Applicants are hereby requested to apply online through the University website www.jfn.ac.lk


**Deadline for application: 10.06.2021**
Eligible candidates will receive the admission card for the aptitude test only via email. The date of the aptitude test will also be notified via email.

**Payment Method**
Application fee of Rs.1000/= should be made in any branch of the Peoples' Bank in favor of the University of Jaffna Account No. 440002410001667.

**Registrar,**
**The University of Jaffna.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 03 . 1956



மறைவு 30 . 05 . 2020

## அமரர் ஆறுமுகம் உருத்திரமூர்த்தி

### திதி : அட்டமி (20.05.2021)

சுதுமலை அம்மன் கோவிலின்
நிரந்தர தொண்டனாய்
அடியார்களுக்கு அடியவர் ஆனாய்
அம்பாளுக்கு ஓர் அபிராமி பட்டரானாய்
நிஜமா'க நீங்கள் மறைந்து
ஓர் ஆண்டு ஆனதோ
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து தினம் தினம்
நான் ஏங்கித் தவிக்கின்றேன்.
காலங்கள் ஓடிக் கடந்தாலும்
உங்களை என் உள்ளத்தில்
வைத்து பூஜிப்பேன் தெய்வமே

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

சுதுமலை வடக்கு,
சுதுமலை.

ஆருயிர் மனைவி
உருத்திரமூர்த்தி பவானி (ஆசிரியர்)

# மரண அறிவித்தல்



## திருமதி. ஜெயலக்சுமி குகபாஸ்கரன்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஜெயலக்சுமி குகபாஸ்கரன் அவர்கள் நேற்று (19.05.2021) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மராஜா - மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சற்குணம் சண்முகம் தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு.சண்முகம் குகபாஸ்கரன் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி மனோகரி மகேந்திரன், திரு.தர்மராஜா யோகேஸ்வரன் ஆகியோரின் மூத்த சகோதரியும் காலஞ்சென்ற சண்முகம் ஜயபாஸ்கரன், திரு.மகேந்திரன், திருமதி ஜெயந்தி யோகேஸ்வரன், திருமதி வனஜா ஜயபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.05.2021)புதன்கிழமை பி.ப. 02.00 மணியளவில் அவரது உடுவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:
071 8474592

தகவல்
கணவர் - ச.குகபாஸ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றையாட்சிக்குள்...

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

"எமது நாட்டின் இறையாண்மை, சுயாதீனம், ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகியவை உள்ளிட்டவற்றை பலப்படுத்துவதற்காக நாட்டைப் பாதுகாத்து, மீட்டெடுத்துத் தந்த முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் ஆகியோர் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு தரப்பினரையும் பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி நினைவுகூர்ந்து, அவர்களுக்கு உச்சபட்ச கௌரவத்தைச் செலுத்துகின்றது.

உயிர்த தியாகம் செய்த படையினரின் குடும்பத்தினருக்கும், அங்கவீனமடைந்த படையினருக்கும், ஒட்டுமொத்த இராணுவ பிரஜைகளுக்கும் வழங்கப்பட வேண்டிய அனைத்து சலுகைகளும், சிறப்புரிமைகளும் வழங்கப்படவேண்டும். இதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார்.

நாட்டில் நிலையானதொரு சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனினும், இந்த நாட்டிலுள்ள ஏதேனும் சில பிரிவுகளுக்கு (சிறுபான்மையின மக்கள்) பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுமாயின், தமக்கு தொடர்ந்தும் அநீதி இழைக்கப்படுகின்றது என அவர்கள் கருதும் பட்சத்தில் அவ்வாறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது.

ஆகவே, அந்தப் பிரிவுகளின் கோரிக்கைகளுக்கும் செவிமடுத்து, பேச்சு நடத்தி ஒற்றையாட்சிக்குள், அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தற்போதுள்ளவாறு நடைமுறைப்படுத்துமாறு யோசனை முன்வைக்கின்றோம். அவ்வாறு செய்து வென்றெடுக்கப்பட்ட சமாதானத்தை நிலையான சமாதானமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." என்றார். (த-44)

## பல்கலை...

மாதம் 11 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை இணையதளத்தினூடாக பதிவுசெய்து பெற்றுக்கொள்ள முடியும். பல்கலைக்கழக பாடநெறிகளை தெரிவு செய்வதற்கான வழிகாட்டல் கைநூலை அங்கீகரிக்கப்பட்டுள்ள புத்தக விற்பனை நிலையங்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் கொள்வனவு செய்ய முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். (த-இ)

## 'போர்ட்சிற்றி'

வுக்கு ஆதரவு வழங்க வேண்டும்."

இவ்வாறு கோரிக்கை விடுத்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைபை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தப் பெரும் திட்டத்தின் மூலம் இன்று 269 ஹெக்ரேயர் நிலப்பரப்பை இலங்கையுடன் இணைப்பதற்கு முடிந்துள்ளது. புதிய நிலப்பரப்பு 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முன்னைய அரசால் கொழும்பு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதுடன், இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் முழுப் பலன்களையும் பெறுவதற்கு, இந்த நகர்ப்புற வளாகத்தின் மூலம் பெரும் முதலீடுகளை நாட்டினுள் ஈர்ப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் வணிகக் கட்டமைப்புகளை சரியாக நிறுவ வேண்டியது அவசியமாகும்.

அந்த கட்டமைப்பை நமக்கு சரியாக தயாரிக்க முடியுமாயின், அதனூடாக நமது நாட்டின் பொருளாதாரத்துக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 15 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது என பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, புதிய நகர கட்டுமானப் பணிகளின் ஊடாக முதல் 5 ஆண்டுகளில் சுமார் இரண்டு லட்சம் வேலை வாய்ப்புகள் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க முடியும். முதல் ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக சுமார் 83 ஆயிரம் புதிய நிரந்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் வாய்ப்புக் கிட்டும் என பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

இதேவேளை, இந்தத் துறைமுக நகரத்தில் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளில் குறைந்தது 75 சதவீதமாவது இலங்கையர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையர்களுக்குத் தேவையான சிறப்புத் திறன்கள் இல்லாத சில சந்தர்ப்பங்களில், இந்த நிலையை தளர்த்த ஆணைக்குழுவுக்கு இடம் க்கொடுக்க வேண்டும் என்று நம்புகின்றோம். அதன்படி, இதுபோன்ற விசேட சந்தர்ப்பங்களில் இந்த நிலையைத் தளர்த்த அவர்களுக்கு அதிகாரம் அளித்து, ஏராளமான இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார். (த-22)

## இரண்டு...

புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை ஆகிய மூன்று பொலிஸ் பிரிவுகள் இரண்டு வாரங்களுக்கு முடக்கப்பட் டுள்ளன. இந்தக் காலப்பகுதியில், ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் கொரோனாத் தொற்றாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் இனம் காணும்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் பின்னரே, எந்தெந்தக் கிராம அலுவலர் பிரிவுகளை தனிமைப்படுத்துவது? எவற்றை விடுவிப்பது என்பது தொடர்பில் முடிவெ டுக்கப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் மு.உமாசங்கர் தெரிவித்தார். (த-19)

## வடக்கு....

சாலையில் கொரோனாக் கொத்தணி கண்டறியப்பட்டுள்ள நிலையில், அங்கு பணியாற்றும் 422 பேர் பரிசோதனைக்கு வராமல் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆடைத் தொழிற்சாலையில் கடந்த 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் 266 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அங்கு தொழிற்சாலையில் இதுவரையில் 326 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை அங்கு பணியாற்றும் 422 பேர் இதுவரை பரிசோதனைக்கு வராமல் தலைமறைவாகியுள்ளனர்.

இவர்களது விவரங்கள் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டு அவர்களை வீடுகளில் தனிமைப்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது. (ஒ.5)

## நேற்று தொற்று...

அதேவேளை, மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒன்றரை லட்சத்தைத் தாண்டியுள்ளது.

\நேற்று 3 ஆயிரத்து 623 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை இதுவாகும்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 343 ஆக எகிறியுள்ளது.

இதையடுத்து, சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 925 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேலும், 1,222 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து நேற்று குணமடைந்துள்ளனர். இதன்படி, குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 367 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

## சாவு...

வான ஆகக்கூடிய கொரோனாச் சாவு எண்ணிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் இதனை நேற்றிரவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான மொத்த கொரோனாச் சாவுகள் எண்ணிக்கை 1051 ஆக அதிகரித்துள்ளது. (த -22)

## கொரோனாவால்...

உயிரிழந்தார். இதன்படி மன்னாரில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4ஆக அதிகரித்தது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

தொற்றுக்கு உள்ளாகி கடந்த ஒரு வாரகாலமாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் செயற்கை சுவாச கருவியின் உதவியுடன் சிகிச்சை பெற்றுவந்த 64 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்தார். கொரோனாத் தொற்றுடன் கூடிய நிமோனியா காய்ச்சல் அவருக்கு இருந்தமையால் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை மையத்துக்கு வவுனியாவைச் சேர்ந்த நான்கு பேர் அழைத்துவரப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் இடப்பற்றாக்குறை காரணமாக மேலும் எட்டு கொரோனாத் தொற்றாளர்களை மன்னார் மாவட்டத்துக்கு அழைத்து வருவதற்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-213)

## தமிழருக்கு...

யும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவு தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு கூறினார். சீனாவுக்கு அதிகாரங்களை வழங்கும் வகையில் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு ஊடாக நடவடிக்கை எடுத்ததைப்போல, அன்று தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்க ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் அன்று அஹிம்சை ரீதியாக போராடியவர்களையும் ஆயுத ரீதியாக போராடியவர்களையும் அடக்கி ஒடுக்கி பயங்கரவாதிகள் மற்றும் பிரிவினைவாதி கள் என அரசு முத்திரை குத்தியது என்றும் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டினார். (த-இ)

## தமிழ் மக்களுக்கு...

நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய சரத் பொன்சேகா இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

"போர் முடிவுக்குக் கொண்டுவரப்படும். அதற்கான பொறுப்பு அடுத்த இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்படமாட்டாது. 2008 ஆம் ஆண்டுக்கு பிறகு பிரபாகரனுக்கு மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று 2008 ஜனவரியில் நான் அறிவித்திருந்தேன். இதன்படி போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. எமது இராணுவத்தினர் அதற்குப் பக்கபலமாக இருந்தனர். வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் வாழும் ஒட்டுமொத்த மக்களுக்கும் சமாதானத்தை பெற்றுக்கொடுப்பதற்காகவே நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். இதனால்தான் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, இராணுவத் தளபதியாக இருந்த என்மீது எவ்வித குரோதம் வைராக்கியமின்றி வாக்களித்தனர். தமிழ் மக்களுக்காகவே புலிகள் அமைப்பு போராடியது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்தச் சபையில் நேற்று (நேற்று முன்தினம்) வெளியிட்ட கருத்து தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

மக்களுக்காகப் போராடுகின்றோம் என முன்னிலையாகி மற்றுமொரு இன மக்களை கொல்வதற்கும், தலதா மாளிகை போன்ற வணக்க ஸ்தலங்கள்மீது தாக்குதல் நடத்துவதற்கும், பிக்குகளை படுகொலை செய்வதற்கும், கிராமங்களில் உள்ள அப்பாவி மக்களை கொல்வதற்கும் அனுமதி உள்ளதா என குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்கின்றேன். இராணுவத்தினர் பெற்றுக்கொடுத்த வெற்றி மூலமே குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட இன்று ஜனநாயக அரசியலில் ஈடுபடக்கூடியதாக இருக்கின்றது." என்றார். (த-44)

## நாளை...

தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கும்போது போக்குவரத்து இரா ஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

நாடு முழுவதும் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மீண்டும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட வுள்ள நிலையில், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுகின்றவர்கள் கோரிக்கை விடுத்தால் அதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை போக்குவரத்தில் ஈடுபடுத்த தயாராக இருக்கிறோம் எனவும் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© 2000 Agfa-Gevaert N.V.

# 'நினைவுகளை மறுத்து நீதி இல்லை'

## முள்ளிவாய்க்கால் நினைவுரையில் முன்னாள் ஐ.நா. ஆலோசகர் அடமா

**வொஷிங்டன், மே 20**

**நினைவுகளை மறுத்துவிட்டு நீதியைப் பரிசோதிக்க முடியாது. கடந்த காலத்தை எதிர்த்தோ - மறுத்தோ நிகழ்காலத்தில் நிலையான அமைதியையும் முன்னேற்றத்தையும் எட்டிவிட முடியாது. முள்ளிவாய்க்கால் ஆவணப்படுத்தல்களும் அதுசார்ந்த நினைவுமயப்படுத் தல்களும் உலகில் இது போன்ற மாபெரும் கொடுமைகளுக்கு எதிரான மனித உரிமை முன்னெடுப்புகளின் ஒரு முக்கியமான பகுதியாக மாறியுள்ளன. இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கான ஐ.நாவின் முன்னாள் விசேட ஆலோசகர் அடமா டியங்க் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.**



அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு செயற்படுகின்ற நாடுகடந்த தமிழீழ அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட இணைய வழி நினைவுகூரல் நிகழ்வில் நேற்று அடமா டியங்க் 'முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை'யை நிகழ்த்தினார்.

அவரது அந்த உரை இலங்கையில் குற்றங்களுக்கான பெறுப்புக்கூறல் மற்றும் நீதி பரிகார நடவடிக்கைகளின் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலை வரங்களை மதிப்பீடு செய்யும் வகையில் அமைந்தது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களை நினைவுகூர்ந்தும் அதில் உயிர்தப்பியோரின் வலிகளுக்கு மரியாதை செலுத்தியும் நினைவுரையை வழங்குகிறேன் எனக் குறிப்பிட்ட அவர், இலங்கை விடயத்தில் பரிகார நீதி நடவடிக்கைகள் சர்வதேச குற்றங்களுக்கு உட்பட்டதாகவோ அன்றித்தேசங்களுக்குஉட்பட்டவையாகவோ எதுவாக இருப்பினும் பாதிக்கப்பட்டவர்களை முன்னிறுத்திச் செய்யப்படுகின்ற போதுதான் உண்மையான பொறுப்புக் கூறலாக அமைய முடியும் என்று வலியுறுத்தினார்.

முள்ளிவாய்க்கால் என்பது ஒரு மானிடப் பேரவலத்தின் நினைவுகளாக நம்மிடையே உள்ளது. நினைவுகளை மறுத்துவிட்டு ஒருபோதும் உண்மையைப் பரிசோதித்துவிட முடியாது. கடந்த காலத்து நினைவுகளை மீட்டுவது நிகழ்காலத்தின் மீது நம்பிக்கையைக் கொண்டுவர உதவும் என்றும் அவர் தனது உரையில் வலியுறுத்தினார்.

தனது மக்களுக்கு நீதி வழங்க விரும்பாத அதில் முழுமையான ஈடுபாடு காட்டாத அசிரத்தை உள்ள அரசோடு இணைந்து செயற்பட முடியாத நிலைமை உருவாக்குவதை இலங்கை விடயத்தில் நாங்கள் கண்டுள்ளோம். அவ்வாறு ஓர் அரசு செயற்படுமாயின் தன்னுடைய பொறுப்புக் கூறலில் இருந்து விலகிச் செல்லுமாக இருந்தால் அதற்கான பொறுப்பு சர்வதேச அமைப்புகள் மீதே சுமத்தப்படுகிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆனால் எந்த மண்ணில் கொடுமைகள் நிகழ்ந்தனவோ அந்த நாட்டின் அரசு என்ற வகையில் இலங்கையைத் தள்ளி வைத்து விட்டுப் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றுவிடவும் முடியாது என்று அடமா குறிப்பிட் டார்.

'கொவிட்' வைரஸ் நிலைமைகளுக்குப் பின்னர் அதை ஒரு சாட்டாக அல்லது காரணமாகப் பயன்படுத்தி பொறுப்புக் கூறல் மற்றும் நீதி வழங்கும் செயற்பாடுகளில் இருந்து இலங்கை அரசு மேலும் பின்வாங்குகின்ற சூழல் காணப்படுவதை ஏற்றுக்கொள்ள வேண்டியும் உள்ளது என்ற சாரப்படவும் அவர் தனது கருத்தை வெளியிட்டார்.

தற்போதைய ஆட்சியில் இலங்கை ஒரு பாரதூரமான நிலைமைக்குள் சென்று கொண்டிருக்கிறது என்பதை விளக்கி அதன் நடவடிக்கைகளை 'முரண்பாடுகளுக்கான விதைகளைத் தூவுதல்' என்று தலைப்பிட்டு கடிதம் ஒன்றை முன்னாள் ஐ.நா. செயலாளர்களுடன் இணைந்து வெளியிட்டதை அடமா தனது உரையில் நினைவு கூர்ந்தார்.

இலங்கையில் வரவிருக்கும் பேராபத்தை அங்குள்ள நிலைமைகள் முன்கூட்டியே உணர்த்துகின்றன. ஜனநாயகத்துக்கான இடைவெளி அங்கு சுருங்கி வருகின்றது என்ற எச்சரிக்கையை அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டி இருந்ததையும் அவர் குறிப் பிட்டார்.

செனகல் நாட்டைச் சேர்ந்தவரான சட்ட நிபுணர் அடமா டியங்க் 2012ஆம் ஆண்டு அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீன் மூனினால் இனப்படுகொலை களைத்தடுப்பதற்கான விசேட ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்தார்.

செனகலில் நீதி மற்றும் சட்டத் துறைகளில் நீண்ட காலம் பதவிகளை வகித்து வந்த அவர் 2001ஆம் ஆண்டு முதல் றுவண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் பதிவாளராக இருக்கிறார்.

அத்துடன்சர்வதேச ஜுரிகள் ஆணைக் குழுவிலும் நீண்டகாலம் செயற்பட்டவர். 1995 முதல் 2000 வரை ஹெய்ட்டி நாட்டுக்கான ஜக்கிய நாடுகள் சபையின் சுயாதீன நிபுணராக வும் இருந்து வந்தவர். (ம)

# மௌலவியே பிரதான சூத்திரதாரி அமெரிக்காவும் உறுதிப்படுத்தியது

## அமைச்சர் சரத் வீரசேகர சபையில் தகவல்

கொழும்பு, மே 20

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி, நௌப்பர் மௌலவியே என்பது அமெரிக்காவின் விசாரணையிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் அறிவித்தார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முற்பகல் 10 மணிக்கு கூடியது. அமைச்சு தொடர்பான அறிவிப்பு வேளையிலேயே அமைச்சர் சரத் வீரசேகர மேற்படி அறிவிப்பை விடுத்தார்.

**அவர் மேலும் கூறியவை வருமாறு:**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் நௌப்பர் மௌலவியே பிரதான சூத்திரதாரி என்பது இலங்கை பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகள் மூலமும், அமெரிக்கா முன்னெடுத்த விசாரணை ஊடாகவும் உறுதியாகியுள்ளது. ஐ.எஸ். அமைப்பின் சித்தாந்தத்தை கோட்பாட்டை நௌப்பர் மௌலவியே இலங்கைக்குள் கொண்டுவந்தார். 2016 ஆம் ஆண்டு முதல் சஹ்ரானையும் அதே வழியில் பயணிக்க வைத்தார். சஹ்ரானின் மனைவியும் இதை உறுதிப்படுத்தினார்.

அத்துடன், ஐ.எஸ். அமைப்பின் பயிற்சி நிகழ்ச்சி நிரலை நௌப்பர் மௌலவியே இலங்கையில் முன்னெடுத்தார் என்பது அவர் வைத்திருந்த புத்தகங்கள் மற்றும் மடிக்கணினி மூலம் தெரியவந்தது. நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் இருந்த பயிற்சி முகாம்களை அவரே கண்காணித்துள்ளார். நௌப்பர் மௌலவி தனது மனைவியின் தங்கையைத்தான் சஹ்ரானுக்கு திருமணம் முடித்து வைத்துள்ளார். நௌப்பரும், சஹ்ரானும் ஒரே மதரஸாவில் பயின்றுள்ளனர். மேற்படி தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌப்பர் என்பதை ஐ.பி.ஐயும் உறுதிப்படுத்தியுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து எவரும் சந்தேகம்கொள்ள வேண்டியதில்லை. இதுவரை 9 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் வழக்குகள் தொடுக்கப்படும். 30 வருடங்கள் போரை இந்த அரசுதான் முடிவுக்குக் கொண்டுவந்தது. மீண்டும் பயங்கரவாதம், அடிப்படைவாதம் என்பவை தலைதூக்குவதற்கு அரசு இடமளிக்காது. அடிப்படைவாத, பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தக்க தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்- என்றார். (கு-44)

**Vacancy**

Securityguard (Jaffna, Pointpedro, Chavakachcheri)
Office Assistant - Pointpetro, Receptionist, Accounts staff, Clerk, Helper.
0741 383368, 021 315 2500

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 38 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்.
(யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100m தூரம்)
தொடர்பு:
076 221 2037
077 2036 402

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஒட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்
(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)
தொடர்பு:077 288 0152, 077 235 2656
074 075 4204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2021இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.